1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
Tele{phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 16-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 36-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### கால நிலை

காற்றுவீச்சுந் தூக்கமுமாய் இருக்கின்றது. பகலிலே வெயில் அகோரம். மழைக்கோலம் இடையிடையே காணப்படுகின்றது.

### குருமாரின் ஞானஒடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. குருப்பிரசாதிகளின் இரண்டாவதுபிரிவான ஞானஒடுக்கம் சென்ற 14-ந்திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. முப்பது குருமார்வரையில் அதற்குச் சமூகமளித்திருக்கின்றனர். அதிவண. எல். ஏ. அகஸ்ரீன்சுவாமியவர்கள் ஞானஒடுக்க போதகஞ்செய்கின்றார்.

### திரு. எல்மோ யோசெவ், பி. ஏ.

சம்பத்திரிசியார்கல்லூரி ஆசிரியர்களில் ஒருவராய் இருந்துவருகிறவரான திரு. எல்மோ யோசெவ் அவர்கள் இலங்கைச்சர்வகலாசாலை பி. ஏ. பரீட்சையிலே இரண்டாவதுவகுப்பில் அரங்கேறியிருக்கின்றார். இவர்றெயில்வேயிலே தலைமைக்காட்பதவிவகித்திருந்து காலஞ்சென்ற திரு. சவிரிமுத்துயோசெவ் அவர்களின் புத்திரரும், நம்பட்டணத்திலே பலராலும்நன்கறியப்பெற்ற வியாபாரியாராயிருந்து காலஞ்சென்ற உபதேசியார் பிலிப்புசுவாம்பிள்ளை அவர்களின் பௌத்திரருமாவர்.

### இளைப்பாறவேண்டிய வயது

அரசாங்க உத்தியோகஸ்தர்களும், பிறரும் 55வயதிலே கட்டாயமாக இளைப்பாறுவதுபற்றித் தற்போது ஆலோசனை செய்யப்பட்டுவருகிறது; அதனால்விரைவிலே இதுபற்றி முடிவு செய்யப்பட்டுவிடும்; 55வயதிலே இளைப்பாறவேண்டுமென முடிவுசெய்யப்படுகிறவரையிலே 55வயதில்இளைப்பாறும்படி ஓவசியர்கள்இனிமேல் உத்தரவிடப்பட மாட்டார்களென்று போக்குவரத்துமந்திரியாரான திரு. மொன்ரேகு ஜயவிக்கிரமஅவர்கள் குருநாகலில்நடந்த ஓவசியர்களின் ஐக்கிய சங்ககூட்டத்தில் அறிவித்திருக்கின்றார்.

### காரியாதிகாரிக்குப் பிரிவோபசாரம்

நெடுந்தீவுக் காரியாதிகாரியாகக் கடமைபார்த்துவந்து தற்போது மட்டக்களப்புப் பட்டினத்துக்கு மாற்றப்பட்டுச்சென்றிருக்கும் திரு. பி. எல். பற்றிக் அவர்களின் சேவைகளைப் பாராட்டுமுகமாக நெடுந்தீவுகிழக்குச் சனசமூக நிலயத்தில் வடமாகாண உதவிஏசன்ற் திரு. ஏ. எஸ். நவரத்தினராசா அவர்கள்தலைமையில் அவருக்கோர் பிரிவுஉபசாரம் நடத்தப்பட்டது. அதற்குப் புதியகாரியாதிகாரி திரு. பராஜசேகரம் அவர்கள்உட்படப் பலபிரமுகர்கள் சமூகமளித்திருந்தார்கள். அவ்வேளை பிரியாவிடைநாயகரின் சேவைகளைப்பாராட்டிப் பலரும் சொற்பொழிவாற்றினார்கள்.

### டக்றர் குணம் குக், எம். டி.

பிரபலஆங்கிலவைத்தியரான டக்றர் குணம் குக், எம். டி. அவர்கள் மானிப்பாயிலுள்ள கிறீன்ஞாபக ஆஸ்பத்திரியில் ஓர்டக்றராக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கிறாரென அறிகின்றோம்.

### பட்டினசங்கத்தின் வரவேற்பு

பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் பருத்தித்துறைப் பகுதிக்குவிஜயஞ்செய்யும்போது அவருக்கு வரவேற்பு அளிப்பதென்று சென்ற புதன்கிழமைகூடிய பருத்தித்துறைப் பட்டின சங்கத்தின் விசேஷகூட்டம் ஒன்றில் தீர்மானமாயிருக்கிறது.

### மன்னாரும் தண்ணீர்க்கஷ்டமும்

மன்னாரிலே நெடுநாள் பருவமழை சரிவரப்பெய்யாததினால் நீர்நிலைகள் வற்றிக் கடும்வரட்சி ஏற்பட்டிருக்கிறது. அதனால் ஒன்றரைமைல்தூரத்திலுள்ள தோட்டக்காட்டிலிருந்து குழாய்மூலம் மன்னார்ப்பட்டினத்துக்கு வரும் குடிதண்ணீரிலும் உவர்த்தன்மை கலந்திருப்பதால் அதனைப்பருகப் பொதுமக்கள் அஞ்சுகின்றார்கள். சென்ற வருடமும் இதேகாலத்தில் இந்த உவர்த்தன்மை ஏற்படலாயிற்று.

### கன்னியாஸ்திரிமாரின்தொண்டு

மற்றும்நேர்ஸ்மார் வெலிசறை ஆஸ்பத்திரிக்குப்போக விருப்பற்றவர்களாய் இருக்க, கன்னியாஸ்திரீமார் சென்று அந்தஆஸ்பத்திரியில் ஆற்றிவரும் தொண்டுக்காகக் கொட்டாப் பிரதிநிதியாயிருப்பவர் அவர்களுக்குநன்றியறிதலுள்ளவர்களா யிருக்கவேண்டுமெனச் சென்றவெள்ளிக்கிழமை நடந்தேறிய பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையில் நிதிமந்திரியாரான திரு. எம். டி. எச். ஜயவர்த்தனஅவர்கள் ஓர்சந்தர்ப்பத்தில் கூறலாயினர். சயரோகிகளைவைத்துப் பராமரிப்பதே வெலிசறை ஆஸ்பத்திரியாகும்.

### நாயகபிக்குவின் யோசனை

சிலாபப்பகுதியைச்சேர்ந்தவர்களாய் இங்கிலாந்திலே இலங்கையின் ஹை கம்மிஷனராகவிருக்கும் சேர் குளோட் கோறியா அவர்களுக்கும், பாராளுமன்ற பிரதிநிதிகள்சபையின் சபாநாயகரும், நாத்தாண்டிப் பிரதிநிதியுமான சேர் அல்பேட் பீரிஸ்அவர்களுக்கும் சென்ற 13-ந் திகதியன்று தங்கொட்டுவையில் அளிக்கப்பெற்ற ஓர்வரவேற்பில் நாத்தாண்டியைச்சேர்ந்த நாயகபிக்குஅவர்கள் பேசியபோது: தேசியபாஷைகளை உத்தியோகபாஷைகளாக்க 24 மணிநேரம் போதுமென்று சிலர்சொல்லுகிறார்கள்; 24 வருடங்களில்தானும் இந்தவேலை பூர்த்தியடையாது என்பதுதான் எனதுஅபிப்பிராயம்; அரசாங்கத்துக்கு ஒருமதம் வேண்டுமென்றும், அரசாங்கதலைவர் ஓர்புத்தராக இருக்கவேண்டுமென்றும் சிலர்கூறுகிறார்கள்; மதமும்அரசாங்கமும் வேறுவேறானவிஷயங்கள்; ஆகவே, அரசியலில் மதத்தைஇழுக்கக்கூடாது; அரசாங்கத்துக்குத் தலைவராகவருகிறவர் ஒருகுறிப்பிட்ட மதத்தவராகத்தான் இருக்கவேண்டுமென்பது தவறு; தகுதியுடையவர்கள்எவரும் அந்தஸ்தானத்துக்கு வரலாமெனக் கூறினார்.

### தையற்காரர்—நாவிதர் பாடசாலை

இலங்கையிலே தையற்காரரும், நாவிதர்களும் தங்களுக்கென்றும் ஓர் பயிற்சிப்பாடசாலையை விரைவிலே கொண்டிருப்பார்களெனத் தெரியவருகிறது. பாராளுமன்ற தொழில் ஆலோசனைக் கம்மிற்றியில் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களில் இதுபற்றியதும் ஒன்றாகும்.

### பள்ளத்தில் விழுந்தவான்

பன்னிரு புத்தயாத்திரிகர்களை ஏற்றிக்கொண்டு நயினாதீவுக்கு வந்துகொண்டிருந்த மோட்டர்வான்ஒன்று சென்றசனிக்கிழமை யக்கச்சியில்விபத்துக்குள்ளானமையால் பி. தர்மரத்தின தேரோஎனும் பிக்குஉட்படப் பலர்சிறுகாயங்களுடன் தப்பிக்கொண்டனர். வானின் சில்லொன்றுக்குக் காற்றுப்போதாமையால் அதுவீதியை விட்டுவிலகிப் பள்ளத்தில் வீழ்ந்ததென்று சொல்லப்படுகிறது.

### காங்கேசன்துறை விமானநிலையம்

காங்கேசன்துறை விமானநிலையம் நாலரைக்கோடிரூபாசெலவில் திருத்தியமைக்கப்பட விருப்பதாக விமானப்போக்குவரத்துத்தலைவர் திரு. டிக்ஸன் கொத்தலாவலஅவர்கள் தெரிவித்திருக்கின்றார். அவ்வாறுஅது திருத்தியமைக்கப்படுமிடத்து, நிலையம்இருக்குமிடம் விசாலமாக்கப்படுவதோடு, அங்கு மேடும்பள்ளமுமாயுள்ள இடங்களும் மட்டப்படுத்தப்படும். அடுத்த புதிய அரசாங்க நிதிவருடத்தோடுதான் வேலைகள் ஆரம்பமாகவிருக்கின்றன.

### நூற்கழித் தொழிற்சாலை

இலங்கைக் கைத்தறிவேலைகளுக்குத் தேவைப்படும் நூற்கழிகளைச் செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்று கொழும்பிலிருந்து பதினேந்துமைல் தூரத்திற்கப்பாலுள்ள ஓர்இடத்திலே 50லட்சம்ரூபாசெலவில் அமைக்கப்படவிருக்கிறது. இந்தத்தொழிற்சாலைத் திட்டம் நடைமுறைக்குவருமிடத்து இரண்டுலட்சம்பேருக்கு வேலைவசதி அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கைக்குத்தேவைப்படும் நூற்கழிகளைச்செய்யப் போதியளவு பஞ்சு இங்குசெய்யப்படுகிறவரையில் எகிப்திலிருந்து அது இறக்குமதிசெய்யப்படும்.

### பாலிய இராட்சதன்

அனுராதபுரத்தைச்சேர்ந்த தபுதேகம எனும்கிராமத்தில் ஹிறுத் பண்டா எனும் ஓர்பாலியஇராட்சதன் வசித்துவருகின்றான். இவனுக்குவயது எட்டு மாத்திரமே. ஆனால், இவனுடைய நிறை 150 றாத்தல். இவன் காலைப்போசனமாக எட்டு முட்டைகளும், ஒருறாத்தல்அப்பமும் சாப்பிடுகிறான். மத்தியானப்போசனமாக ஒன்றரைப்படிஅரிசிச்சாதம் சாப்பிட்டுக்கொள்ளுகிறான். பிற்பகலில் ஒருறாத்தல்அப்பத்துடன் மேலும் எட்டுமுட்டைகள் முடிவெடுக்கிறான். இராப்போசனமாக மத்தியானத்திற்போன்று ஒன்றரைப்படி அரிசிச்சாதம் உண்டுதள்ளுகிறான். சமீபத்திலேஇவன் மொறட்டுவாவில் ஒருவாரமட்டாகக் காட்சிக்குவைக்கப்பட்டான். சனங்கள் கூட்டங்கூட்டமாகச்சென்று ஆளுக்கு 50 சதம் சலார்கொடுத்து இந்தப்பாலியஇராட்சதனைப் பார்த்துச்சென்றார்கள்.

### மாவரிமுறையைநீக்கச் சிபாரிசு

யாழ்ப்பாணத்திலே நடைபெற்றுவரும் மாவரிமுறையைப்பற்றிப் பரிசீலனைநடத்த நியமிக்கப்பட்டிருந்த விசேஷகம்மிற்றியானது மாவரிமுறையை அகற்றிவிட்டு, அதற்குப்பதில் தவறணைமுறையை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமெனச் சிபாரிசு செய்திருக்கின்றது. தவறணைகளை ஸ்தாபித்துநடத்தும் அதிகாரம் சீவற்தொழிலாளர்களின் கூட்டுறவுச்சங்க யூனியன்களிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென்றும் கம்மிற்றி சிபாரிசு செய்துள்ளது. ஆனால், அவ்விதம் ஒப்படைக்கப்படும் யூனியன்கள் மதுபரிபாலனகம்மிஷனர் விதிக்கிறபடி ஒவ்வோர்தவறணையின் விலையிலும் ஐந்திலொருபங்குதொகையும், அத்துடன் நன்னடத்தைக்கு உத்தரவாதமாக மேலும் ஐந்திலொருபங்குதொகையும் கட்டமுன்வரவேண்டும். அன்றேல் தவறணைகள் ஏலத்தில்விடப்படும்.

### கண்டித்தொகுதிஇடைத்தேர்தல்

பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையில் கலியாயிருந்துவரும் கண்டித்தொகுதி ஸ்தானத்துக்கு அபேட்சகர்களாக முன்வருவார் தங்கள்நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் தினம் இம்மாதம் 27-ந் திகதி திங்கட்கிழமையாகும். இத்தஸ்தானத்துக்குப் பிரதிநிதியாக அப்போது தெரியப்பெற்றவரான திரு. ஈ. எல். சேனநாயக அவர்கள் தமதுதேர்தலை ஆட்சேபித்துச் சமர்ப்பிக்கப்பட்ட மனுவிசாரணையின் விளைவாய்த் தமதுஸ்தானத்தை இழந்தமையாலே அதுகாலியாயிற்று. இந்தஸ்தானத்துக்குத் தனதுஅபேட்சகராய் ஐக்கியதேசியக்கட்சி(யு. என். பி.) திரு. பிறெட் ஈ. டி. சில்வா அவர்களை நிறுத்தியிருக்கின்றது. கம்யூனிஸ்த—லங்கா சமசமாச கட்சிகளது ஐக்கிய முன்னணியின் ஆதரவுடன் கண்டிநகரசபை அங்கத்தவரான திரு. ரி. பி. தென்னக்கூன் என்பவர் ஓர் சுதந்திர இடதுசாரி அபேட்சகராக வெளிகொண்டிருக்கின்றார்.

### நகரசபையின் வரவேற்பு

யாழ்ப்பாணநகரசபையின் மாதாந்தகூட்டம் சென்ற10-ந்திகதிவெள்ளிக்கிழமைசாயங்காலம் மேயர் சாம் ஏ. சபாபதி அவர்கள்தலைமையில் நடந்தேறியது. அதிலே யாழ்ப்பாணநகருக்குப் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்களின் அதிகாரபூர்வமான முதற்தரிசனையின் போது, நகர்வாசிகள் பேரால் அவருக்கு ஓர்பொதுவரவேற்பு அளிப்பதெனத் தீர்மானிக்கப்படலாயிற்று. இதற்குச்சார்பாக அங்கத்தவர்களில் எட்டுப்பேர் வாக்களித்தனர். லங்கா சமசமாச கட்சியைச்சேர்ந்த திரு. ஏ. துரைராசசிங்கம், சமஷ்டிக் கட்சியைச்சேர்ந்த திரு. ஏ. துரைசிங்கம் எனுமிருவரும் மாறாக வாக்களித்தனர். தமிழ்க் காங்கிரஸைச்சேர்ந்த திரு. பி. எம். ஜோண், ரி. எஸ். துரைராசா, ஹாஜி வி. எம். எம். அபுசாலி எனும் மூவரும் வாக்களியாது விலகிக்கொண்டனர். தீர்மானத்துக்குச் சார்பாக வாக்களித்தஎட்டுப்பேரிலும் காதி எம். எம். சுல்தான், திரு. ஏ. ஜே. சுவாம்பிள்ளை என்பவர்கள் தமிழ்க் காங்கிரஸ் அங்கத்தவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி காண்போம்

1. ஆஹா! என்ன ஆனந்தமே
அன்புடன் வாராய் என்தோழா!
2. அண்மையில் காண்போம் காட்சியொன்று
ஆனந்த மான காட்சியொன்று
3. எங்கே என்ன காட்சியது
என்று கேட்பாய் என்தோழா!
4. சம்பத் திரிசி யார்தலத்தில்
சரியாய் ஐப்பசித் திங்களெட்டில்
5. ஞானப தேசப் பொருட்காட்சி
நாமுமே காணக் கண்காட்சி
6. சத்திய வேத உண்மைபல
பத்தியாய்க் காண்போம் கண்ணாலே
7. திவ்விய பூசை திருச்செபங்கள்
தினமும் செபிக்கும் செபமாலை
8. எங்கள் யேசு அன்றுபட்ட
எல்லை இல்லாப் பாடுகளும்
9. இன்னும் எவ்வித காட்சிகளோ
எம்மால் உரைக்க முடியாதே
10. நாடியே காண்போம் என்தோழா!
கூடியே செபிப்போம் ஜெயம்பெறவே.

— அருள்

## இளைஞனே, எழுந்திரு!

—: ம. இருதயம் :—

நயீம்நகரம் அன்று நாகரீகத்துடன் விளங்கியது. மக்களின்மனதில் ஓர் மறுமலர்ச்சி. உவகைபொங்க உற்சாகத்துடன் உன்னதன்யேசுவின் வருகைக்காக வாடிக்கொண்டிருந்தனர். வருந்தித்தேடிய வாளனும் அதோ வந்துவிட்டார். எவ்வளவு கும்பல். பல்லாயிரக்கணக்கான மக்கள் மன்னர் மன்னனை உணவின்றியே உற்சாகத்துடனும், உவப்புடனும் பின்தொடர்ந்து வருகின்றனர். நயீம்நகரவாசல் வந்தடைந்துவிட்டார் நாதன்யேசு.

சற்றுத்தூரத்திலே ஓர் சலிப்புக்குரல். மகனைப்பறிகொடுத்த மங்கையின் மரணக்குரல். ஓரேமகன் காலனால் கவர்ந்துசெல்லப் பட்டுவிட்டதை நினைந்துபுலம்புகிறாள், புழுப்போல் துடிக்கின்றாள், துவண்டுவிழுகின்றாள், துக்கம்தாளாதவளாய். அழுகின்றாள், தன்னை அனாதையாய் விட்டுச்சென்ற அம்மகனைநினைத்து. கண்ணீர்வடிக்கின்றாள், தன்னைத்தனியே தவிக்கவிட்டுச்சென்ற கண்மணியைநினைத்து.

அதோ! பார்த்துவிட்டார், பாவிகளின் மீட்பர். ஏழைதுயர் துடைக்கும் யேசு மரணவேதனையில் துடிக்கும் தாயைக்கண்டு மனமிரங்குகிறார். என்ன நடந்தது? இறந்தபாலனை எடுத்துச்சென்றவர்கள் நின்றார்கள். பாடையைஅணுகி இன்பயேசு என்ன கூறினார்? "இளைஞனே! நான் சொல்லுகிறேன், எழுந்திரு." இளைஞன் எழுகின்றான். புத்துயிர்பெற்ற சிறுவன் உயிர்தந்த உத்தமரின் அடிபணிகின்றான்.

கத்தோலிக்கஇளைஞன் அறியவேண்டியஅறிவுரைகள் இதில் அனந்தம் இருக்கின்றன. மன்னுயிரை மீட்சத் தன்னுயிரைத் தியாகம்செய்த மன்னர் மன்னனை மறந்துபோகும்படியாய் மக்களைக்கெடுப்பதையே தனதுதொழிலாகக் கொண்டு அலையும்சாத்தானுக்கு அடிமைப்பட்டு ஞானகாரியங்களில் மரித்தவராக, நடைப்பிணமாக நடமாடும்இளைஞர்கள் எத்தனைபேர் இன்றையஉலகில் இருக்கின்றனர்!

தம்மையும், தமதுமகனையும்மறந்து தாறுமாறுக அலைகின்றாயே என்று தாளாத்துயருடன் கண்ணீர்வடித்த கன்னிமாமரிதாயை மறந்துதிரிகிறாயே இளைஞனே! இன்னும்கேள்: உன் பாவங்களுக்காக ஒன்றுமறியாத ஓர் உத்தமன் பலியாயினரே; அதை எள்ளளவாவது எண்ணிப்பார்த்தனையா? நீ கண்ணால் காணக்கூடாதவற்றைக் கண்டுகளித்தாய்; அதற்காகத் தமது கண்களில் முள் இறங்கும்அளவுக்கு அடிபட்டு அவஸ்தைப்பட்டாரே; அந்தஆண்டவனை அரைநிமிஷமாவது நினைத்துப்பார்த்தனையா? சுகபோகங்களைச் சுவைத்தது நீ; ஆனால், கசைகளால்அடிபட்டு இரத்தம்வெள்ளமாய் ஓடக் கன்றிக்கறுத்து இதோமனிதன் என்று ஏளனம்செய்து எள்ளிநகையாடும்அளவுக்கு அவஸ்தைப்படுவது ஒரு பாவமும்அறியாத ஒரு உத்தமன் நினைத்துப்பார்த்தாயா? இளைஞனே; நினைத்துப்பார்க்க நேரமில்லையா, அல்லது சிந்திக்கச் சிரமமாயிருக்கிறதா? உடலில் உரமில்லையா? ஊக்கமில்லையா? இதற்குப் பதில்இல்லையா?

லூர்துநகரிலே தோன்றினாள் லூர்து அன்னை, எதற்காக? நடைப்பிணமாகத்திரியும் உனக்கு நல்வழிகாட்டவே. செபமாலைஎன்னும் ஆயுதத்தைச் செகத்திற்கு அளித்தாள். செகமது உய்யச் செபியுங்கள்என்றாள். செவிமடுத்தாயா? இல்லையே. செவிசாய்த்திருந்தால் பாத்திமாவில் அன்னை மீளவும் தோன்றவேண்டிய அவசியம் இருந்திருக்காதே. பாத்திமாவிலும் தோன்றினாள், பாவியாகியஉன்னைப் பக்தனாக்க. காற்றினால் கருகிவிழும் சருகுகளைப்போலப் பாவிகள் நரகபாதாளத்தில் விழுந்து நாசமாகின்றார்கள், இளைஞனே, எழுந்திரு! பாவமாகியநெருப்பு உனக்குப் பஞ்சுமெத்தையாய் இருக்கிறதே. உனக்காக எனதுமகன்—மாசுமறுவற்றமன்னன் பட்டபாடுகளைப்பார்! உன்மனம் இளகாததேன்? இதோ இந்தஆயுதத்தைப் பிடியென்று செபமாலையை உன்னிடம்கொடுத்தாளே அந்தத்தாய். அதை ஏன்இன்னும் உபயோகிக்க மறுக்கிறாய் இளைஞனே! இதுவரை தூங்கியதுபோதும். இளைஞனே, எழுந்திரு! உலகம்உய்ய உன்சேவை அவசியம். உறக்கம்விட்டு உற்சாகம் கொள். நாகரீகத்தின்போரால் நாசமுறும்சமுதாயத்தை நல்வழிப்படுத்த நமது நல்லாயர்கள் பட்டபாடுகளைப் பார்! தீயசக்திகளைத் தீயிலிட்டுத் தீரமுடன் வீரமுடன் வீரிட்டெழு.

உன் அன்னை, பாத்திமா அன்னை, பரலோகஅன்னை புண்ணியன்யேசுவைப் புவிக்குக்கொடுத்துப் பாவிகளாகியநமக்காக அத்திருமகனைப் பலிகொடுத்த அன்னை நீசெய்யும் அக்கிரமங்களுக்காக அண்மையில்அழுது கண்ணீர் வடித்ததை அறிந்தும் நீ வீறுபெறுமல் இருப்பாயோ? எழு, எழுந்து உன் கையில் வாடாமாலை, நறுமணங்கமழும் நல்லதோர்செபமாலை செகமதுஉய்யச் செபிப்பாயாக!

அதோ! அன்றுஇறந்த இளைஞனை நோக்கி, எழுந்திருஎன்று திருவாய் மலர்ந்த இன்பயேசு உன்னைநோக்கி எழுந்திருஎன்கிறார். நேரம்நெருங்கிவிட்டதுஎன்கிறார். தீயசக்திகள் தீயைப்போல்பாவி மக்களைமாக்களாக்கும் நேரம். நல்லசமயம், இதை நழுவவிடாதே. மாதாவின் சேனையில் சேர், மாமரியின்மனம்மகிழ. சோம்பலால் துருப்பிடித்திருக்கும் உன்னைச் சேவை உலைக்களத்திலிட்டுச் செம்மைப்படுத்து. உன்செபத்தால் உலகம்உய்யும். உலகின் ஒருகோடிமுதல் மறுகோடிமட்டும் இன்பயேசுவின் இனியநாமம் இடைவிடாது சப்தித் தொலிக்கும். எழுந்திருஇளைஞனே!

## நாம் திருச்சிலுவையை வணங்குவதேன்?

அக்காலத்திலே குற்றவாளிகளை மிகவுங் குரூரமாகவும், மனுத்தன்மையற்ற விதமாகவும் கொன்றொழிப்பது வழக்கம். ஆரம்பத்திலே குற்றவாளிகளை மரத்தில் தூக்கிலிடுவது வழக்கமாயிருந்தது. பிற்பட்டகாலத்தில் கைகளையும, கால்களையும் இங்கும் அங்குமாக இழுத்து அவர்களை மரத்தில் கட்டும் வழக்கம் உண்டானது. பின்னர் கட்டுவதற்குப்பதில் கைகளையும் கால்களையும் அறையும்வழக்கம் ஏற்பட்டது. அதன்மேல் உயிர்மரத்தில் அறைவதற்குப்பதில் ஓர்நேரிய குத்தியைநட்டு அதில் அறைந்து வந்தார்கள். கடைசியாக அக்குத்திக்கு ஒருகுறுக்குச்சட்டத்தையும் அணைத்தார்கள். இவ்வாறே சிலுவை குற்றவாளிகளைத் தண்டிக்கும் கழுமரமாயிற்று.

326-ம்ஆண்டு அர்ச். ஏலேனம்மாள் திவ்வியஇரட்சகர் அறையுண்ட உண்மையான திருச்சிலுவையைக் கண்டெடுத்தபின் சிலுவையில் குற்றவாளிகளை அறைந்துகொல்லப் படாதென்று ஓர் புதியசட்டத்தைப் பிறப்பித்தாள். அக்காலந்தொட்டு ஆதிக்கிறீஸ்தவர்கள் திருச்சிலுவைமட்டில் அந்தரங்கமாகக் காண்பித்துவந்த பக்தியைப் பகிரங்கமாகக் காண்பிக்க ஆரம்பித்தார்கள், உண்மையாகவே திருச்சிலுவை திருச்சபையின் பக்திக்குரிய திருப்பண்டங்கள் எல்லாவற்றிலும் அதிகம் முதன்மையானதாகிவிட்டது.

இதற்கு ஆதாரமாக அர்ச். ஜெருசலேம் சிறிலப்பர் சொல்வதை இங்கு எடுத்துக்காட்டுவது நலமாகும். அவர் சொல்லுவது: "திருச்சிலுவை அடையாளம் மிகவும்வல்லபமுள்ள ஓர்பாதுகாப்பு; வறியவர்களுக்கு ஓர் இனாமான பரிசுத்தபொக்ஷம்; தைரியமற்றவர்கள் சுலபமாகச் செய்துமுடிக்கக்கூடிய ஓர்காரியம்; இது நரகக்கூளிகளுக்குப் பயங்கரத்தைஉண்டுபண்ணிக் கிறீஸ்தவர்களைப் பாதுகாக்கும் ஓர் பட்டையம்."

இந்தப்பரிசுத்த அடையாளத்தைப் பாதுகாப்பாகக்கொண்டு வேதசாட்சிகள் மிருகயுத்தக்களரியில் காட்டுமிருகங்களுடன் அஞ்சாது போர்பொருதினார்கள். சூளையின் அகோரதீயைத் தைரியத்துடன் தாங்கினார்கள். அவர்கள் வாளுக்கு இரையாவதற்கும், சின்னபின்னமாய்ச் சவுக்கால்அடிபடுவதற்குமாகத் தைரியத்தைப்பெற உதவியாயிருந்தது சிலுவையே. மிருதுவான பெண்மணிகளும், பச்சைப்பாலரும் கொடுங்கோலரின் மிரட்டலுக்கஞ்சாது கொரேமரணத்துக்கு உட்பட்டதும் திருச்சிலுவையின் உதவியைக்கொண்டுதான்.

இது நம்மெல்லோருக்கும் நமது நாளாந்தசீவியத்தில் நம்மைப்பாதுகாக்கும் ஓர்கவசம்போல் விளங்குகிறது. இந்தக்கண்ணீர்க்கணவாய் ஓர் சோதனைத்தலம். இந்தக் கவசந்தான் நம்மைப் பிசாசின் சற்பனைகளில்நின்றும், நித்திய கேட்டில்நின்றும் பாதுகாக்கும். கிறீஸ்தவர்களிற்பலர் இந்தஉண்மையை உணருகிறார்கள். நித்திரைக்குப்போகும்போது நெற்றியிலும், மார்பிலும் சிலுவையடையாள மிட்டுப் பிசாசின் சற்பனைகள்மட்டிலே இந்த அடையாளத்துக்குள்ள பலத்தை நினைவுகூருகிறார்கள்.

அர்ச். கிறிசொஸ்தம் சொல்வது: "உனது இருதயம் கோபத்தினால் பொங்குகிறதா? சிலுவையடையாளம் இடு. உன்கோபம்ஆறும். இந்தச் சிலுவை அடையாளமே நமது சகல காயங்களையும் ஆற்றும். உலகபற்றுதலை நீக்கும். காம இருதயங்களைச் சுத்திகரிக்கும். சிலுவைஅடையாளத்தைப் பக்தியுடன்வரைவது சகலஅனுகூலங்களுக்கும் ஓர்தவறாத சாதனம் என்பது மிகையாகாது. ஓர் கிறீஸ்தவன் தனக்குவரும் சகலஇடைஞ்சல் இக்கட்டுகளையும் மேற்கொள்ளவேண்டும். இதற்காகத்தான் ஓர் கிறீஸ்தவன் கவலையற்ற தன்மையாகவல்ல, ஆனால், மிகவும் சாக்கிரதையாகப் போட்டுக்கொள்ளவேண்டும். "நீயோ என் மரணவேளையில் என்னைத்தாக்கத் துணிவாயாகில் நீ மிகவும் வெட்கப்படக்கூடியதன்மையாய்ப் பறந்தோடப் பண்ண ஓர்கருவியுண்டு; அதுதான் திருச்சிலுவை என்பதை நினைவுகூர்" என்று பிசாசைப்பார்த்து அடிக்கடி சொல்லுவார் அர்ச். கிறகோரியார். வீட்டைவிட்டு புறப்படும்போது திருச்சிலுவை அடையாளத்தைப் போட்டுக்கொண்டு புறப்பட ஒருபோதும் மறவாதே. அது வழுக்குநிலத்தில் ஓர் ஊன்றுகோல் போலும், சத்துருவை எதிர்க்கும் ஓர் வல்லமையான ஆயுதம் போலும் உனக்கு உதவும். சிலுவை அடையாளம் நீ ஒரு யுத்தவீரன்என்பதை உனக்கு உணர்த்தும். திருச்சிலுவையின் மூலமாக உண்டானவெற்றிகளை நீ அறியமாட்டாயா? அது மரணத்தை வெற்றிகொண்டிருக்கிறது, பாவத்தைப் போக்கியிருக்கிறது. நரகத்தை வெண்மையாக்கி யிருக்கிறது. பிசாசைத் தோற்கடித்து உலகம்முழுவதற்கும் புத்துயிர்கொடுத்திருக்கிறது. அதன்வல்லபத்தில் நீ அவநம்பிக்கை கொள்ளுகிறாயா?

— ஜே. எ. அருள்

● மரியாயின்சேனையை அடியிட்டவர்களில்ஒருவரான வண. மிக்காயேல் ரோஹர்சுவாமியார் தமது 73-ம் வயதிலே சமீபத்தில் டபிளின்நகரில்காலஞ்செல்லலாயினர். இவரே மரியாயின் சேனையைத் தலைமைவகித்துநடத்தும் கன்சீலியத்தின் ஞானவிசாரணைத்தலைவராகவும் இருந்துவந்தார்.

● கிறீஸ்நாட்டின் தலைப்பட்டணமாகிய அதென்ஸ்நகருக்குச் சமீபமான லெர்னாஎனும் சிறுபட்டினத்தில் ஓர் புராதன சமாதியும், ஓர்அரசமாளிகையும் இருப்பதை அமெரிக்க–கிரேக்க பூவகசாஸ்திர நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். மாளிகையும், அதன் [illegible]ள்ள முறையைக்கொண்டு அவைகள் 2,200 வருடங்களின்முன் கட்டப்பட்டிருக்க வேண்டுமென உத்தேசிக்கப்படுகிறது.

● செஞ்சீனாவின் ஆக்கிரமிப்பை எதிர்த்து அமெரிக்க ஐக்கியதேசம் போர்மோசாதீவில் இருந்துவருகின்ற தேசீயசீனாவின்பக்கமாக நிற்கிறதென்றும், அமெரிக்க ஏழாவதுகடற்படை ஜனாதிபதியான ஐஸன்ஹாவர் அவர்களது நிர்வாகத்தில்கட்டளைப்படி போர்மோசாவைப் பாதுகாத்துக்கொண்டு நிற்கிறதென்றும் சென்றவியாழக்கிழமை போர்மோசாவுக்கு விஜயஞ்செய்த அமெரிக்கவெளிநாட்டு மந்திரியாரான திரு. ஜோண் டல்லெஸ் கூறியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்



### வியெற்மினின் குருமடங்கள்

இந்தோசீனாவிலே வியெற்னாமின் வடபகுதி (வியெற்மின்) கம்யூனிஸ்தரின் கைப்பட்டதும் அங்கிருந்துவந்த மூன்றுபிரதம குருமடங்களும் கம்யூனிஸ்தர் கைப்படாத ஏனையபகுதிகளுக்குக் கொண்டுபோகப்பட்டுள்ளன. ஹனோய்நகரில் இருந்துவந்த பிரான்சிய சல்பிஸியன் சபைக் குருமடத்திலிருந்த 100 குருத்துவமாணவர்களும், அவர்களின்பேராசிரியர்களும் வின்-லோங்குக்குக் கொண்டுபோகப்பட்டிருக்கிறார்கள். பூயச்சுநகர குருமடத்தில் இருந்த 65மாணவர்களும் அந்நகரைக் கம்யூனிஸ்தர் அடிப்படுத்துமுன்னரே சைகோனுக்குச் சென்றுவிட்டார்கள். நாம்டின் நகர குருமடத்திலிருந்த 65மாணவர்களும் சென்றஜூனியிலே விமானங்களில் ஹெய்ப்போங்குக்கு அனுப்பப்பட்டார்கள். பிந்த இவர்கள் ஹொங்கோங்தீவுக்குச் செல்வார்கள்.

### இந்திய ஜனாதிபதியின் விஜயம்

கடந்தமாதம் அர்ச். பிலோமினம்மாளின் வருடாந்தர திருநாளுக்கு முந்திய தினமாகிய 10-8-54 செவ்வாய்க்கிழமை காலை 11-30மணிக்கு ராஷ்ட்ரபதி டக்டர் இராஜேந்திர பிரசாத்அவர்கள் தமது பரிவாரத்துடன் மைசூர் அர்ச். பிலோமினம்மாள் மேற்றிராசனக் கோவிலைப்பார்க்கச்சென்றார். அச்சமயம் மைசூர்மேற்றிராணியாராகிய மகாவந். ரெனே ஃபியூகா ஆண்டவரவர்கள் தமது குருமார், கன்னியர், கிறீஸ்தவர்களுடன் ஜனாதிபதியை எதிர்கொண்டு கோவிலின் முன்புறத்தில் அழகாகஅமைக்கப்பெற்றிருந்த பந்தலில் வரவேற்று எல்லோர்மனதையும் கவரத்தக்க ஓர் வந்தனோபசாரப் பத்திரம் வாசித்தளித்தார். ராஷ்ட்ரபதி தமதுபதிலில்: கிறீஸ்துமதம் அப்போஸ்தலரான அர்ச். தோமையாரால் இவ்விந்திய நாட்டில் நிலைநாட்டப்பட்டு அக்காலத்திலிருந்தே பரவிவருகிறதென்றும், கிறீஸ்துமதத்தையோ அல்லது வேறெந்தமதங்களையோ பரப்பவும், போதிக்கவும் இந்திய குடியரசுச்சட்டம் தடைசெய்வதில்லையென்றும், கிறீஸ்துவ மிஷனரிமார் இந்த நாட்டில் அநேகபாடசாலைகள், வைத்தியசாலைகள் முதலானவைகளை நிறுவி நாட்டினருக்குப் பேருதவிகள் செய்திருப்பதாகவும் புகழ்ந்துபேசிக் கிறீஸ்துவ சமூகம் தன்னலமற்றதென்று பாராட்டினார். பின்னர் கோவில்சென்று அங்குள்ள அலங்காரங்களையும், சுரூபங்களையுங் கண்டு அகமகிழ்ந்தார். நடுப்பீடத்துக்குமுன்பாகத் திவ்விய நற்கருணைநாதரை மேற்றிராணியாண்டவர் முழந்தாளிட்டு ஆராதித்தபோது ராஷ்ட்ரபதி கை குவித்துச் சிரவணக்கம் செய்தார். கடைசியாகக் கோவில் முற்றத்தில் நிறைந்திருந்த கிறீஸ்தவர்களுக்கும்,இதரமதத்தினர்களுக்கும் தமது நன்றியைத்தெரிவித்து மைசூர்முதன் மந்திரியாகிய ஸ்ரீ கே. ஹனுமந்தய்யா அவர்களுடன் தமது மாளிகைசென்றார்.

### நாணமற்ற உடைகள்

ஆலோசனைத் திருச்சங்கத்தின் தலைவரான கருதினால் சிரியாச்சி ஆண்டவரவர்கள் பாப்பரசரது ஏவுதலின் பேரில், நாணமற்ற உடைகளைப்பற்றி ஒரு சுற்றுக்கடிதம் வெளியிட்டுள்ளார். தற்காலஉலகில் ஒழுக்கச்சிதைவுக்குக் காரணமாயிருக்கும் மிகப்பெரும் தீங்குகளுள் ஒன்று நாணமற்றஉடையென்பதை அந்தக்கடிதம் சுட்டிக்காட்டுகிறது. மரியன்னையின் இந்தப்புனிதஆண்டிலே கிறீஸ்தவஒழுக்க சீர்திருத்தத்திற்காக எல்லாரும் உழைக்க வேண்டுமென்று பாப்பரசர் கேட்டுக்கொள்ளுகிறார். உடையணியும் முறைகளிலுள்ள ஒழுக்கக்கேட்டைத் தவிர்க்க எல்லாமுயற்சிகளையும் கையாளுமாறு மேற்றிராணிமார் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடலோரங்களிலும், விடுமுறைக் கேத்திரங்களிலும், தெருவீதிகளிலும், நகரங்களிலும், நாட்டுப்புறங்களிலும், கோவில்களிலும்கூட நாணமற்ற உடைகள் அணிந்து வருவது வழக்கமாகிவிட்டது. இந்தத் தீயவழக்கம் இளைஞர்களுக்குப் பேராபத்து விளைக்கின்றது. நமதுஉடல் பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருப்பதால் அதன்தூய்மையைக் கறைப்படுத்தும் எவ்வகைத்தீமைகளையும் விலக்கக் கிறீஸ்தவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சுற்றுக்கடிதம் நினைவூட்டுகிறது. உடையணியும் முறைகளைச் சீர்திருத்தும்பணியில் ஈடுபடுமாறு கத்தோலிக்கசேவாசங்கத்தினர்களைக் கருதினால் தூண்டுகிறார்.

### மும்மலைகள்மேல் திவ்வியபூசை

இந்தமரியாயின் வருடத்திலே அத்திருஅன்னைக்கு ஓர்விசேஷ வணக்கம் செலுத்துமுகமாகப் பிரித்தானியகத்தோலிக்க மலையேற்றகாரர் சென்றஆவணிமாதம் 5-ந் திகதியன்று இங்கிலாந்து, ஸ்கொத்திலாந்து, வேல்ஸ் எனும் மூன்றுநாடுகளிலுமுள்ள மகாஉந்நதமான மூன்றுமலைகளினதும் — அதாவது ஸ்காபெல், பென்நெவிஸ், சினோடன் எனும் மும்மலைகளினதும் உச்சிகளுக்கேறி அவற்றிலே அன்று பிற்பகல் ஏககாலத்தில் நிறைவேறிய திவ்வியபூசைகள்கண்டு, திருவிருந்தருந்தி மாதாவுக்கு விசேஷவணக்கவழிபாட்டுவிழாவொன்றுநடத்தினார்கள். அன்றுதினம் அவர்களின் பாதுகாவலான பனிமயமாதாவின் திருநாளாகும். ரோமாபுரியிலுள்ள எஸ்குய்லின்குன்றின்மீது புதுமையாகப் பனிவிழச்செய்து, இந்த[illegible]கொண்டு தாம்காட்டிய இடத்திலே அர்ச். மேரிமேஜர் மகாலயம் கட்டப்பட வேண்டுமென்று தேவதாயார் விருப்புக்காட்டிய அற்புத சம்பவத்தை அந்தவேளை இவர்களெல்லாம் ஞாபகப்படுத்திக் கொண்டார்கள். ஆடவர்களும்,பெண்மணிகளும், பிள்ளைகளுமாக 210பேர் மும்மலைகளிலும்ஏறி அன்றைய விழாவில் கலந்துகொண்டார்கள்.

### வியெற்னாமின் கத்தோலிக்க பிரதமர்

இன்றையஉலகில் மிகவுங்கடுமையாக வேலைசெய்துவருகின்ற ஒருமனிதர் வியெற்னாமின் பிரதமரான திரு. நிகோடின் டியெம்அவர்களே. அந்நாட்டின் வடபகுதியைக் கம்யூனிஸ்தர்கள் வசம் ஒப்படைத்த ஜெனிவா உடன்படிக்கையைத் தொடர்ந்து தெற்கு இந்தோசீனாவை அவர்களிடமிருந்து காத்துவைக்கும்பெரும்பணியில் தற்சமையம் இவர் அயராது ஈடுபட்டுவருகின்றார். இவர் வின்-லோங்கின் விக்கார் அப்போஸ்தலிக்குவான பீற்றர் நிகோ டின்துக் மேற்றிராணியாரினதும், அந்நாட்டின் கத்தோலிக்கதொழிற்சங்க தலைவரான திரு. நிகோடின் நூ அவர்களினதும் சகோதரர். தற்போது இவருக்குவயது 53. இவர் 32வயதுடையவராய் இருக்கும்போதே பாவோடாய் சக்கிரவர்த்தியால் உள்நாட்டுமந்திரியாராய் அப்போது நியமனஞ் செய்யப்பெற்றிருந்தார். ஆனால், பாவோடாய் சக்கிரவர்த்தியின் ஆட்சியிலே பிரான்சிடமிருந்து தம்முடையநாடு சுதந்திரமடையச் சந்தர்ப்பமில்லையெனக்கண்டதே இவர் அப்பதவியைவிட்டு நீங்கினர்.

### கத்தோலிக்க சக்கிரவர்த்தினி

சமீபத்திலே பாத்திமாபதி சென்ற திருயாத்திரிகர்களில் 39 வயதுடையவரான நாம்போவுங் எனும்சக்கிரவர்த்தினியும் ஒருவர். இவர் இந்தோசீனாவிலே வியெற்நாமின் சக்கிரவர்த்தியான பாவோடாயின் தேவியாராவர். ஓர்புத்தசமயத்தவராயுள்ள சக்கிரவர்த்தியை இவர் ரோமாபுரியிலிருந்துகிடைத்த விசேஷஇளக்காரத்தைக்கொண்டு விவாகஞ் செய்தார். அதனால் இவர்களின் பிள்ளைகள்எல்லோரும் கத்தோலிக்கர். சக்கிரவர்த்தினி அங்கே தொங்கின் நாட்டில் கீர்த்திவாய்ந்த ஓர்கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர். வியெற்நாமின் தற்போதையபிரதமரும் ஓர்கத்தோலிக்கரே.

### மனந்திரும்பிய சைத்திரிகர்

பிரித்தானியஅரசாங்க பிரதமரான சேர் வின்ஸ்றன் சேர்ச்சில்அவர்களின் எண்பதாவது பிறந்தபெருநாள் வருகிறகார்த்திகைமாதம் வருகின்றது. இதன் ஞாபகார்த்தமாகப் பிரித்தானிய பாராளுமன்றத்திலுள்ள அவரது சகஅங்கத்தவர்கள் சேர்ந்து அவரின்விசேஷ அபூர்வபிரதிமைப்படமஒன்றை அவருக்கு அன்பளிப்புச்செய்யவிருக்கின்றார்கள். தற்போது இந்தப்படம் புறொட்டஸ்தாந்தராயிருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொண்ட பிரபலசைத்திரிகரான கிறஹம் சதர்லன்ட்அவர்களால் விந்தாரிக்கப்பட்டு வருகிறது.

### கம்யூனிஸ்த தம்பதிகள்

இத்தாலியிலே கனோஸா-டி-புகிளியா பட்டினத்தில் கம்யூனிஸ்தகட்சியை மிகுந்தஆவேசத்துடன் மும்முரமாக ஆதரித்துமுதன்மை தாங்கியவர்களில் அன்ரோனியோ றொடிஸ்கோ என்பவரும், அவர்மனைவியான அன்னாவும் அங்கே கம்யூனிஸத்துக்கு ஓர்அரண்போல இருந்தார்கள். தற்போது இவர்கள் அக்கட்சியிலிருந்து தங்கள் அங்கத்துவத்தை இராசினாமாச் செய்து முன்போலக் கத்தோலிக்கவாழ்க்கை நடத்திவருகின்றார்கள். கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள அப்பட்டினசங்கத்தில் கணவர் தற்போதும் அங்கத்தவராய் இருந்துவருகின்றார். மனைவி அச்சங்கத்தின் முன்னாள்அங்கத்தவள். "நாங்கள் கம்யூனிஸ்தகட்சி அங்கத்தவர்களாயிருந்துவந்த காலத்திலே செய்துகொண்ட தீங்குகளுக்காக எங்களால்ஆனமட்டும் பரிகாரஞ்செய்ய" உடன்படுவதாகச் சாட்சிகள்முன்பாக இவர்கள் எழுத்துமூலம் தெரிவித்திருக்கிறார்கள்.

### பஞ்சத்தை எதிர்நோக்கும் செஞ்சீனா

கம்யூனிஸ்த சீனஅரசாங்கம் விடுதலைசெய்த மூன்றுஅமெரிக்க குருமார் சிலதினங்களின் முன் ஹொங்கோங்தீவுபோய்ச் சேரலாயினர். இவர்கள் யாது கூறுகின்றனர்? இன்னும் எட்டு மாதகாலத்திலே சீனாவில்பெரிய பஞ்சமுண்டாகுமென இவர்கள் முன்னதாக உணர்ந்து கூறுகின்றனர். சீனாவிலே சாதாரண மக்கள் கம்யூனிஸத்தை முற்றிலுமே ஆதரிப்பவர்கள் அல்லவென்று அவர்களில்ஒருவரான வண. ஏர்னெஸ்ற் ஹொட்ஸ் சுவாமியார் தெரிவித்திருக்கின்றார். "அநேகர் பட்டினியால் வாடி மாளுவதற்குமுன் யாரோ ஒருவர்வந்து தங்களைமீட்டுவைப்பாரென அவர்கள் நாளெண்ணிக்கொண்டிருக்கின்றார்கள்; சீனத்தேசியவாதிகள் திரும்ப வருவது இன்று சீனமக்களுக்கு மிதமிஞ்சிய மகிழ்ச்சியைத் தருவதாகும்; அப்போது சீனாமுழுவதும் காட்சியளித்த ஸ்ராலினுடையவும், மாவோ-ரிஸி-துங்குடையவும் படங்கள் இப்போது முற்றாகவே மறைந்துவிட்டன; கம்யூனிஸ்தகொடியும் மனப்பூர்வமாகப் பறக்க விடப்படுவது அருமையாகி விட்டது" எனச் சுவாமியார் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத
# பாதுகாவலன்

1954-ம் ஆண்டு
புரட்டாசி மாதம் 16-ந் திகதி

## மரியாயின் சமாகமம்

யாழ்ப்பாணத் திருச்சபையின் பெருமைவாய்ந்த சரித்திரத்திலே பொன்னட்சரங்கள் கொண்டு பொறிக்கப்பட்டுள்ள சம்பவங்களில், கொழும்புத்துறைச் சஞ்சூசையப்பர் தாபனத்தை மத்தியதானமாகக் கொண்டு பெரும்பிரஸ்தாபமாக நடந்தேறிய சமாகமமும் ஒன்றாகும். அப்போது அந்தத்தாபனம் அளித்துநின்ற ஞானமனோகரகாட்சியும், சமாகமத்தின்போது நடந்தேறிய பக்தியருட்சிக்கும், பெருமகிழ்ச்சிக்குமுரிய திருவைபவங்களின் மாட்சியும் இன்றுமே நமது மனக்கண் முன்பாகத் தோற்றமளித்துக் கொண்டிருக்கின்றன. அன்று முதல் சமாகமம்என்பது ஓர் சாதாரணமொழிபோல நம்மிடையே பாவனையிலும் வந்துகொண்டது. ஆம், அதுமறக்க முடியாத ஓர்மகத்தான நிகழ்ச்சியேஎன்க.

நிற்க, அப்போதுநிகழ்ந்தது சற்பிரசாத சமாகமம். இப்போது நிகழவிருப்பது, மரியாயின்சமாகமம். சர்வலோக நாயகியான நமது மரியன்னையின் இப்புனித ஆண்டிலே அவருக்குத் தோத்திரமும், மகிமையுமாக—இப்பூசித ஆண்டிலே நமதுமேற்றிராசனத்தின் பல்வேறுவிசாரணைப்பங்குகளிலும் ஞானச்சிறப்புகளுடன் நடைபெற்றுவருகின்ற பக்திமுயற்சிகள், மற்றும் பகிரங்கவிழாக்கள் ஆதியவற்றிற்கெல்லாம் முடிசூட்டும் ஓர் திருவைபவமாக வருகிற ஐப்பசிமாதம் 8-ந் திகதி முதல் 10-ந் திகதி வரையிலே வெள்ளி, சனி, ஞாயிறு எனும் முத்தினங்களிலும் மிக்க சம்பிரமமாக இந்தச்சமாகமம் நடந்தேறவிருக்கின்றது. இதனை நடத்துவதற்குத் தகுந்த ஓர்மத்தியதான்மாகச் சம்பத்திரிசியார் கல்லூரி தெரிந்தெடுக்கப்பட்டிருப்பது சாலவும் பொருத்தமானதே. யாழ்ப்பாணமேற்றிராசனத்திலே முன்னர் நிகழாத தொன்றாய் இச்சமாகமத்தின்போது ஞானோபதேசப்பொருட்காட்சிஒன்றும் பிரமாதமாக நடந்தேறவிருக்கிறது. இந்தக்காட்சியைப் பெரிதும்வெற்றிகரமாக நடாத்திமுடிக்கவேண்டுமென்ற பேரார்வத்துடன் பலவிடங்களிலும் நெடுநாளாகப் பெருமித ஆயத்தங்கள் நடைபெற்றுவருகின்றன. அதனால், அஃது ஓர் கண்கொள்ளாக் காட்சியாய், கண்ணுறுவாருக்கெல்லாம் பெரும்ஞானநன்மைகள் உண்டுபண்ணுங்காட்சியாய் இருக்குமென்று சொல்லவேண்டியதில்லை.

மரியாயின்சமாகமம் ஆரம்பமாக இன்னும்மூன்றுவாரங்கள் இருக்கின்றன. அது சித்திகரமாய், மாபெருஞ்சிறப்பாய் நடைபெறத்தக்கதாக அதற்கென்று முன்னிலும் அதிகம் மீசுரமாக நம்மை ஆயத்தப்படுத்துவோம்! சமாகமத்தின்போது மாதாவின் திருப்பாதாரவிந்தத்தில் சமர்ப்பிக்கவிருக்கும் ஞானப்பூச்செண்டை முன்னிலும் அதிகம்பக்திவேகத்துடனும், மனோற்சாகத்துடனும் தயாரித்துவருவோம்! இம்மூன்றுவாரங்களிலும்மாலைமாலையாய் அதிகமாகச் செபமாலை செபித்தும், தினமும் பூசைபூசையாய்த் திவ்விய பூசைகண்டும், சற்பிரசாதம்சந்தித்தும், பல்வேறு நற்கிருத்தியங்கள், பக்திமுயற்சிகள்செய்தும் ஏராளமான ஞானப்புஷ்பங்களைச் சேகரித்துச் சமாகமத்தின்போது மாதாவின்பாதகமலத்தில் பாரியதோர்ஞானப்பூச்செண்டாக அன்பளிப்புச்செய்ய இன்றுமுதல் கூடியஆயத்தஞ்செய்துவருவோம்! அதனால் இம்மூன்றுவாரங்களிலும் நமது கோவில்கள், பாடசாலைகள், வீடுகள், மற்றும் ஸ்தாபனங்களிலெல்லாம் சமாகம ஞானப்புஷ்பங்கள் அல்லும் பகலும் மலர்ந்து ஞானபரிமளம் கமழ்ந்துகொண்டிருக்க வேண்டும். சமாகமதென்றல் ஞானசோகரியமாக வீசிக்கொண்டிருக்க வேண்டும். மரியாயின்சமாகமம் எப்போதுவருமென்று எல்லோருமே மிகுந்தகாதலுடன் நாள் எண்ணிக்கொண்டிருக்கவேண்டும். மரியாயின்சமாகமம் மங்கலகரமாக நிகழ்வதாக!




## சதாசகாயமாதா கோணம்

## வெற்றிகொண்ட இருதயம்

ஹங்கேரிய தேசத்தின் மேற்குப்புறத்தில் ஐனோசால்மாஎன்று ஒருபட்டினம். கடந்தஇரண்டாவது மகாயுத்தத்தின்போது அங்கு ருஷியபடைகள் 40 போர்வீரர்களைக் கைதிகள்ஆக்கின. அவர்களைப் புகையிரத மார்க்கமாகக் கிழக்குருஷியாவுக்குஅனுப்பிவைத்தன. அவர்கள் தங்களுடையகதி என்னவாகுமோவென்று ஏங்கினர். எத்தகையசாவு தங்களைக் காத்திருக்கிறதோ என்று பயந்துநடுங்கினர், ஏனெனில், செம்படைகளின் அட்டூழியங்களைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். அவர்களில் 36 பேர் கத்தோலிக்கர். ஏனைய நால்வரும் புறொட்டஸ்தாந்தர்கள்

கத்தோலிக்கரான யுத்தகைதிகளில் ஒருவனான அன்ரன் ஜெல்லிஎன்பவன் தன்னுடன் பிடிபட்டவர்களாகிய 39 பேரையும்பார்த்து ஒருசிறு ஆலோசனைகூறினான். பாத்திமாச்சம்பவத்தை அவர்களுக்கு விளக்கினான். "கடைசியில் என்மாசில்லாதஇருதயம் வெற்றிகொள்ளும்" என்று தேவதாயார்கூறிய வாக்கியத்தைநினைவூட்டினான். ஆகவே, அந்தமாசில்லாத இருதயநாயகிக்கு ஒரு நவநாள்செய்யத் தன்னுடன் சேர்ந்துகொள்ளும்படி அவர்களைப் பரிவாகவேண்டினான். அந்தவெற்றிநாயகி ஏதோவகையாய் ருஷியஎல்லைக்குள் தங்களை விடமாட்டாளென்ற மனத்தென்புதனக் கிருப்பதாகவும் திடனாய்க்கூறினான்.

ருஷியஎல்லையைநோக்கி யுத்தகைதிகளைக்கொண்ட புகைவண்டி அதிவேகமாக ஓடிக்கொண்டேயிருந்தது. இந்த 40 பேரும் ஒன்பதுநாட்களாக விடேன்துடேன் என்று மன்றாடினார்கள். செபமாலைக்குமேற் செபமாலை ஓதினார்கள். அவர்கள் நினைத்தபடி ஒருவிதமீட்புங் கிடைக்கவில்லை. இன்னும் ஒன்பதுநாட்கள் மன்றாடினார்கள். புகைவண்டியில் வெப்பம் அதிகமாயிருந்தது. பலநாட்களாக அவர்களுக்குத் தண்ணீர்தானுங்கொடுக்கமறுத்துவிட்டார்கள். அதனால்அவர்கள் தாகத்தால் அவதிப்பட்டனர். பெலவீனத்தால் பலர் வருந்தினர். சிலர் நோய்வாய்ப்பட்டனர். இவ்விதநிலைமையில் தொடர்ந்து செபஞ்செய்வதை ஒவ்வொருவராய் விட்டுவிட்டனர். ஆனால், அன்ரன் ஜெல்லி அவநம்பிக்கைப்படவில்லை. மாதம்ஆவணிமாதம். அந்த மாதத்தின் 15-ந் திகதியும் அண்மியது. தாம் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்தப்பெரிய திருநாளன்றுஎன்கிலும்தேவதாயார் தங்கட்குச் சலுகை காட்டுவாளென்று நம்பியிருந்தான். 23 நாட் பயணத்தின்பின உணவின்றி, உறக்கமின்றி, பலவித அவதிகளுக்குள்ளாகிக் கடைசியாக அவர்கள் ருமேனியாவிலுள்ள வேக்கனிஎனும் பட்டினத்தைச்சேர்ந்தனர். அன்றுதினம்ஆவணி மாதம் 15-ந்திகதி. அவர்களெல்லோரும் நோய்வாய்ப்பட்டிருந்தமையால் அவர்களை யுத்தகைதிகளின் ஆஸ்பத்திரிஒன்றுக்கு அனுப்பியபின்னர், புகைவண்டி தனதுநியமஸ்தானத்தை நோக்கிச்சென்றது. அன்ரன் ஜெல்லி நோயாளியாக விருந்தாலும், தேவதாயாரைநோக்கி மன்றாடுவதை விட்டுவிடவில்லை. ஆவணிமாதம் 22-ந் திகதி ருமேனியாவிலுள்ள ஹங்கேரிய யுத்தகைதிகள் எல்லோரும் விடுதலைசெய்யப்பட்டுத் தத்தம்வீடுகளுக்கு அனுப்பப்பட வேண்டும்என்று அதிகாரபீடத்திலிருந்து உத்தரவு அனுப்பப்பட்டது. ஆவணிமாதம் 22-ந்திகதி தேவதாயாரின் மாசில்லாத இருதயத்தின் திருநாள்என்பதை இவ்விடம் நினைவூட்டத் தேவையில்லை.

## பொது வர்த்தமானம்

### செவ்வாய்க்கிரகமும் பறக்கும்தட்டும்

செவ்வாய்க்கிரகத்தில் வசிக்கும் மக்களையும், பறக்குந்தட்டுகளையும்பற்றிய நூல்ஒன்று எழுதியிருப்பவரான திரு. ஈ. என். வான்டெண்டிறீசன் என்பவர் இம்மாதம் 2-ந் திகதிஇரவு 9-15மணிக்கும், 9-30மணிக்குமிடையே கொள்ளுப்பிட்டிக்குச்சமீபமாய்க் கடலுக்கு மேலாகப் பறக்குந்தட்டுஒன்றைப் பார்த்ததாகக் கூறுகின்றார். அது சுமார் 10அடிநீளமும், 6அடிஅகலமுமுள்ளதாய் மிகவும் பிரகாசத்தோடு காணப்பட்டதாம். கொள்ளுப்பிட்டியிலேயே வசிக்கிறவரான 59 வயதுடைய இவர் கடந்த 25 வருடகாலமாகக் கிரகங்களைப்பற்றி — முக்கியமாகச் செவ்வாய்க் கிரகத்தைப்பற்றி ஆராய்ச்சி நடத்தி வந்திருக்கிறார். பறக்குந்தட்டுகள் செவ்வாய்க்கிரகத்திலிருந்து வருவனவென்றும், செவ்வாய்க்கிரகத்திலிருந்து பூமிக்குவரும் முதலாம்ஆள் 1985-ம் ஆண்டில் வருவாரென்றும் இவர்நம்புகின்றார்.

### 82,000 பவுண் அதிர்ஷ்டம்

இங்கிலாந்திலே நோர்தாம்ரன் மேற்றிராசன குழந்தைகள் பாதுகாப்புச் சங்கத்திடமிருந்து ஓர்சுவிகாரப் பிள்ளையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வயதுடைய ஜொன்னி மிச்செல் எனும்பாலியன் 82,000பவுண் அதிர்ஷ்டமாகப் பெற்றிருக்கின்றான். அங்கே ஹித்எனுமிடத்தில் வசித்திருந்த திரு. றிச்சேட் மிச்செல்என்பவரும், அவர்பாரியாரும் தங்களுக்கு ஓர்புத்திரபாக்கியம் கிடைக்கவேண்டுமென்று இருபதுவருடகாலமாகக் கையெடுத்து வந்தார்கள். அதுகிட்டாமற்போகவே அப்போது ஆறுமாதக் குழந்தையாயிருந்த இந்த ஜொன்னியைச் சுவிகாரப் பிள்ளையாக ஏற்றுத் தங்கள் குடும்பப் பெயரையும் அவனுக்குச் சூட்டினார்கள். பெரியவர்த்தகரான திரு. றிச்சேட் மிச்சேல்அவர்கள் சென்ற பங்குனிமாதம் காலஞ்சென்றார். அவர் மரிக்குமுன் எழுதிவைத்துப் போன மரணசாதனத்தில் 82,000 பவுண் பெறுமதியான அவருடைய சொத்துமுழுவதும் அவனுக்கே விடப்பட்டிருக்கின்றது.

### கண்பார்வைபெற்ற குருடர்

ஆர்ஜென்ரினாவின் தலைப்பட்டணமாகிய புவெனோஸ் அயேர்ஸ் நகரிலே கடந்தஇருபத்தாறு ஆண்டுகளாகக் கண்பார்வை இழந்திருந்த 42 வயதுடைய அவாட்ரோஎன்பவர் தனது பார்வையை மீண்டும்பெற்றுப் பதினாறு வருடங்களின்முன் தான்மணஞ்செய்துகொண்ட தனது மனைவியை முதன்முறையாகக் கண்ணாக்கண்டதே ஆனந்தபரவசமுற்றவராய், "நீ ஒரு சிறந்தபெண்; நீ இவ்வளவு அழகாயிருப்பாயென்று நான் ஒருபோதும் நினைக்கவில்லை" என்று வியந்துகொண்டாரெனச் சென்ற 8-ந்திகதி தந்திச் சமாச்சாரம் தெரிவிக்கலாயிற்று. இவருக்குப்பதினாறுவயது நடக்கும்போது ஒருசுவர் இவர்மீது இடிந்துவிழுந்தமையால் கண்பார்வையை இழந்துபோயினர். அப்போது இழந்த பார்வையை இவர்அன்றுதான் ஆஸ்பத்திரியில் மீண்டும்பெற்றார்.

## நானா சங்கதிகள்

● யுத்தகாலத்திலே யப்பானின் தற்கொலை ஆகாயப்படை விமானிகளாயிருந்த பன்னிருவர் தற்போது தம்முடையவிசாரணைப்பங்கில் ஞாயிறுவார ஞானோபதேசவகுப்பில் படித்துவருகின்றார்களென அங்குள்ள ஓர்ஐரிஷ் கத்தோலிக்கமிஷனரியாகிய வண. பற்றிக் ஹேறண் சுவாமியார் அறிவிக்கின்றார். இப்பன்னிருவரும் சுவாமியாராலே மனந்திரும்பப்பட்டவர்கள்.

● பம்பாயிலே வருகிற மார்கழி மாதம் 4-ந் திகதிமுதல் 8-ந் திகதிவரையில் பெரும்பிரஸ்தாபமாக நடந்தேறவிருக்கின்ற இந்தியதேசீய மரியாயின் மகாநாட்டிற்குத் தம்முடையபிரதிநிதியாகப் பரிசுத்தபாப்பரசர் பம்பாய்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் வலேரியான் கிறேசியாஸ் ஆண்டவரை நியமனஞ்செய்திருக்கிறாரெனச் சென்ற புதன்கிழமை வத்திக்கானிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது.

● அமெரிக்க ஐக்கியதேச கடற்படை 75 மிலிமீற்றர் விமானஎதிர்ப்புப் பீரங்கிஒன்றை நவமாகச் செய்திருக்கின்றது. சத்துருவிமானங்கள் 15 மைலுக்கப்பால் வரும்போதே அவைகளைக்கண்டறிந்து அவைகள் நான்கு மைல் தூரத்தில்வந்ததும் பனிப்புகாரென்றும், சுகாத்திய பேதமென்றும் பாராது இது அவற்றைச்சுட்டுத்தள்ளக் கூடியனவாம்.

● "பறக்குந்தட்டு"டன் இணைநிற்கக் கூடிய ஓர்புரட்சிகரமான புதுமாதிரி ஆகாயவிமானம் ஒன்றைப் பிரித்தானிய ஆகாயவிஞ்ஞானிகள் கட்டிவருகின்றார்கள். இதற்குச் சிறகுகளோ அன்றேல் செலுத்துங்கருவியோ கிடையாது. "பறக்கும் பெட் ஹெட்" எனும் பெயர்தாங்கியுள்ள இந்தப் பரிசோதனைவிமானம் வருகால ஆகாய விமானங்களைக் கட்டுவதில் பலநவீன முறைகளைக்கையாட வழிபண்ணுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

### குடும்பத்துக்கு ஐந்துஏக்கர்

வடமாராட்சிப்பகுதியிலே வல்லிபுரக் கோவிலையடுத்த மணற்பாங்கான நிலங்களை மத்தியதர வகுப்பாருக்குப் பகிர்ந்துகொடுக்கும் நோக்கமாகக் காணிக்கச்சேரிஒன்றை உதவிமாகாண ஏசன்றர் விரைவிலே நடத்தவிருக்கின்றார். தென்னைச்செய்கைக்கு மிக வாய்ப்பான அப்பகுதியை நல்லமுறையில் பயன்படுத்தும் நோக்கத்துடன் குடும்பம்ஒன்றுக்கு ஐந்துஏக்கர்வீதம் நிலமும், கிணறுவெட்டப் பணமும் கொடுப்பதுடன், வீடுகட்டியபின் அதற்கு நன்கொடையுமளிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

### அரிசி, பாண், மா விலைகுறையுமா?

பாகிஸ்தான், தாய்லாந்து, இந்தியா முதலாம்நாடுகள் மிகவும்குறைந்தவிலையிலே இலங்கைக்கு அரிசிஉதவ முன்வந்திருப்பதால் அடுத்துநிகழும் 1955-ம் ஆண்டிலே சீனாவிடமிருந்து கூடியமட்டும் குறைந்தவிலையில் அரிசிவாங்குவதற்குப் பேச்சுவார்த்தை நடைபெறவிருக்கிறது. அடுத்தஆண்டிலே உலகச்சந்தையின் அரிசிவிலையைக்கொண்டு ஒருகொத்துஅரிசி 40சதமாக விற்கமுடியுமென்று நிபுணர்கள் கருதுகின்றார்கள். தற்போது கூப்பன்அரிசி கொத்துஒன்று 55சதமாக விலைப்படுகிறது. பிறநாடுகளிலே கோதுமைமாவின் விலை தற்போதையவிகிதத்தில் இறங்கிக்கொண்டுபோனால் இதன்விலையும் இங்கே ருத்தல் 20 சதமாகவும், பாணின்விலையை ருத்தல் 22சதமாகவும் குறைக்கமுடியுமெனச் சொல்லப்படுகிறது.

### நிதிமந்திரியாரும் றெயில்வேநஷ்டமும்

பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையின் சென்றவெள்ளிக்கிழமைக்கூட்டத்தில் நிதிமந்திரியார் திரு. எம். டி. எச். ஜயவர்த்தனபேசியபோது: றெயில்வே மூடப்படுமானல் நானே சந்தோஷப்படுவேன்; ஆனல், அநேகருக்கு வேலையில்லாத்திண்டாட்டம் ஏற்படுமே என்பதையிட்டுத்தான் சிந்திக்கவேண்டியிருக்கிறது; வருடம்ஒன்றுக்கு றெயில்வேயால் ஏற்படும்நஷ்டம் 1கோடியே 30 லட்சம் ரூபாவாகும்; பாதுகை றெயில்வேஸ்ரேஷனில் நாளாந்தம் சேரும் வருமானம் 4-50சதம்; ஆனல், அங்கு ஸ்ரேஷனில் கடமைபார்க்கின்ற பதின்மூன்றுபேருக்குச் சம்பளங் கொடுபடவேண்டியிருக்கிறது; றெயிலைக் காட்டிலும் பஸ்ஸைப்பொதுச்சனங்கள் ஏன் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு ஒரு நியாயம், றெயிற்பிரயாணம் இருமணிநேரம்பிடிக்கப் பஸ்பிரயாணம் 45நிமிஷநேரமும் பிடிக்கிறதெனக் கூறினின்றார்.

### அர்ச். பிலோமினம்மாள் திருநாள்

ஹொறணையில் திருப்பதிகொண்டு எழுந்தருளியிருக்கும் அற்புதவாத்தியான அர்ச். பிலோமினம்மாள் திருநாள் சென்ற 5-9-54 ஞாயிறுவாரம் அதிசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முதல்நாள் மாலைஆராதனை 7-30மணிக்கு வண. கட்டளைக்குரவர் உட்பட மூன்று குரவர்களால் பாடப்பெற்று நற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. மறுநாள்காலை 8-30மணிக்குத் திருநாள் பாடற்பூசையிலே கட்டளைக்குரவர் வண. டபிள்யு. சற். டப்றெரு சுவாமிகளால் யாவர்உள்ளமும் கனியும்படி அர்ச். பிலோமினம்மாளின் சீவியத்தைப்பற்றி ஓர்அரியபிரசங்கம் செய்யப்பட்டது. திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்தின்பின் அன்னதானத்துடன் திருநாள் இனிதே முடிவெய்தியது.

S. B.

## வானரசியே! வருக

○ "யுவன்" — கரம்பொன் ○

கொச்சகக் கலிப்பா

1

தாயான நீயெமக்குத் தஞ்சம் அளிப்பதற்கும்
பேயான பகைவனிடர் பின்போக்கி வெல்வதற்கும்
ஓயாமல் எம்முடனே உறைவதற்காய் உத்தமியே
மாயாகின் திருமேனி வடிவுடனே வாராயோ?

2

வெண்ணருணன் உடைதரித்து வெள்ளிமுடி சிரமணிந்து
வண்ணச்சிற் றிடையிலங்க வானீலக் கச்சுடுத்தி
விண்மதியாம் வாகனத்து வீற்றெழுந்தே மேதினியோர்
கண்குளிரக் காட்சிதரக் கன்னிகை நீ வாராயோ?

3

கண்கவரு தோளிணையும் காரொத்த குளலிணையும்
மண்ணவர்கள் கண்டறியா வனப்புடைய குழையிணையும்
பெண்களுக்கோர் மாதிரியாய்ப் பிறரறியா தேமறைத்து
வெண்ணெடுமுக் காடுடனே விண்ணிருந்தும் வாராயோ?

4

அன்றலர்ந்த தாமரைமேல் அம்பலிள மலரிரண்டு
கின்றலர முல்லைதரும் நீளரும்பும் வரிசைபெற
நன்றழகார் நயவதனம் நகைபொலிய நாயகியே
இன்றெமக்கோர் காட்சிதர இப்புவிக்கு வாராயோ?

5

அரியபிதாப் படைத்தபுவி யவர்சுதனர் மீட்டபின்பு
இருவரதும் நேசமதில் இலங்குதிரு இஸ்பிரித்து
பெருமருளால் புதுப்பிக்கப் பின்தொடர்ந்த கன்னிகையே
திருவுருவக் காட்சிதரத் தேவனெடும் வாராயோ?

## வாழைப்பழம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

வாழைஇலை, தடல், பூ, தண்டு, பிஞ்சு, காய் முதலியவைகளெல்லாம் பயன்படுகின்றன. எவ்வாறுஎன்பதை இங்கே சிறிதுகலனிப்போம்.

மயக்கத்தை உண்டுபண்ணும் சாராயம், அபின், சாதிக்காய் முதலிய பொருட்களைஉபயோகித்து மதிமயங்கி அறிவிழந்தவர்கட்கு வாழைத்தடலைச் சாறுகப்பிழிந்து கொடுத்தால் மயக்கவெறி உடனேநீங்கித் தெளிவடைவார்கள்.

தீச்சுட்டபுண்ணினல் அவதிப்படுவோருக்கு வாழைத்தடற்சாறு எரிச்சலைத்தணித்துக் குளிர்ச்சியைத் தருகிறது.

நாம் நாள்தோறும் உண்ணும்உணவில் அரிசி, பருப்பு முதலியவற்றை எவ்வளவுசுத்தமாக உபயோகித்தாலும் நம்மையும்அறியாமல் நெல், சிறியகற்கள், பொடிமணல், தலைமயிர் முதலியவைகள்சேர்ந்து குடலில்தங்கிவிடுகின்றன. எல்லாம்செரித்தாலும் இவைகள்மட்டும் செரிப்பதில்லை. நாளடைவிலே இதுகட்டியாக (குன்மக்கட்டி) உருவாகிவிடுகிறது. பேதிக்குச் சாப்பிட்டாலும் வெளியாவதில்லை. வயிற்றுவலிஉண்டாகி வேதனையாகிறது. ஆங்கிலமுறையில் உள்ளுக்கு மருந்துகொடுத்து, அதில் வயிற்றுவலி நீங்காவிடில் சத்திரசிகிச்சை செய்யப்படுகிறது. சிலசமயங்களில் இது பிராணஆபத்தாகிவிடுகிறது.

இவ்விததுன்பங்கள் இல்லாமல் மிகவும்சுலபமாக அனுபவத்தில் குணம் கண்டதைமட்டும் இங்கு குறிப்பிடுகிறேன். வாழைத்தண்டை இடித்து இரசம்பிழிந்து வாரம்இருமுறை பருகிவரவேண்டும். ஒருமுறைக்கு மூன்றுமுதல் நான்குஅவுன்சு அளவு பருகவேண்டும். அதனல் கற்கள், நெல், மயிர் முதலியவைகள் கரைந்து வெளியாகிவிடுகின்றன. இதனாற்றான் பெரியோர்கள் வாரம்இருமுறை வாழைத்தண்டை உணவுடன்சேர்த்துச் சாப்பிட்டுவரும்படி செய்திருக்கிறார்கள். வாழைத்தண்டை வேகவைத்து நீரை இறுத்துவிடக்கூடாது.

வாழைப்பூவைத் தனியாகவாவது, பருப்புடனுவது சேர்த்துச்சமைத்து உணவுடன்கலந்து உண்டுவந்தால் இரத்தமூலம், நாட்பட்டபிரமேகம், பித்தமிகுதியால் உண்டாகின்றவியாதிகள், கபசம்பந்தமான ஈளைவியாதிகள், வயிற்றுக்கடுப்பு, வேதனைதரும்காசம், கைகால் எரிச்சல், வெட்டைரணம், நாபிரணம், குடற்புண், வாய்ப்புண் முதலியவற்றைப்போக்கி ஆரோக்கியத்தைத்தரும். சீவபலத்தைஉண்டாக்கும்.

வாழைப்பிஞ்சு மதுமேகத்தைப் போக்கும். மூலக்கடுப்பு, வயிற்றுப்புண், சீதபேதி, ஆசனக்கடுப்பு முதலியவைகளைப்போக்கி ஆரோக்கியத்தைத் தரும்.

வாழைக்காய் சரீரமுழுவதும் வாயுவைஉண்டாக்கும். ஆகவே, கூடியமட்டிலும் வாழைக்காயை அதிகமாக உபயோகிக்காமல்இருப்பது மிகவும்நல்லது.

— வைத்திய பூபதி


## ஞானுபதேசக் கோர்வை

ஞானுபதேசக் கோர்வை 3 பாகங்களும் தற்போதுஎம்மிடம் விற்பனைக்கிருக்கின்றன. தேவையானேர் மேல்வரும்விலாசத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

* * *

### இலங்கும் மகிமைமுடி

என்னும்

12-ம் பத்திநாத பாப்பரசரது மரியாயின் புனிதவருடப் பொது நிருபம்

| | | | |
|---|---|---|---|
| டசின் :— | 3-50 | தபாற் செலவு | 35 |
| ஒன்று :— | 35 | ,, | 04 |

* * *

ஞானஒடுக்கப் பிரசங்கம்

விற்பனைக்குத் தயாராய் இருக்கிறது.

விலை பிரதி :— 1-50

மனேஜர்

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம், யாழ்ப்பாணம்.


## புத்தகம் பெற்றுக்கொண்டோம்

சத்தியவேத கோயில் கீர்த்தனங்கள் (புதிய சுதேசவர்ணங்கள்)

முதலாம்பதிப்பு: மட்டக்களப்பு, கத்தோலிக்க அனுத அச்சியந்திர சாலையில் அச்சிடப்பட்டது.

விலை: ரூபா 1-50

## அறிவுச் சுடர்

1. ஓர்காலம் பீங்கான்கோப்பைகள் கழுவிச்சுத்தஞ்செய்து பிழைத்துவந்து இன்று சினிமாஉலகில் புகழ்படைத்துவிளங்கும் இத்தாலியர்யார்?

றுடல்வ் வலென்ரினே என்பவரே. உலகில் மற்றெவரைக்காட்டிலும் அதிகமான சினிமாநடிகர்களைப் பயிற்றிவைத்துப் பிரசித்திபெற்றிருக்கும் திரு. அடல்வ் ஸுகர்என்பவரே இவரையும் பயிற்றியெடுத்தார்.

2. அந்தமான் தீவுக் கூட்டத்தில் எத்தனைதீவுகள் உண்டு?

204 தீவுகள் உண்டு. இவற்றின் மொத்தமான நிலப்பரப்பு 3,143 சதுரமைல். சனத்தொகை 30,963. சென்னையிலிருந்து 740 மைல் தூரத்திலே வங்காளக்குடாக்கடலிலுள்ள இத்தீவுகள் தற்போது இந்தியஅரசாங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

3. ஜப்பானியதேச ஹிரோஹிற்ரோ சக்கிரவர்த்தியும், நாகாகோ சக்கிரவர்த்தினியும் எப்போதாவது ஆகாயப்பிரயாணம் செய்திருக்கிறார்களா?

ஆம், ஒரேயொரு முறையாகவும், முதன்முறையாகவும் சென்ற ஆவணிமாதம் 23-ந் திகதியன்று ஆகாயப்பிரயாணம் செய்திருக்கிறார்கள். அன்றுதினம்இவர்கள் ஜப்பானின் அதிகம்வடதீவாகிய ஹொக்காய்டோதீவில் சுற்றுப்பிரயாணஞ் செய்துவிட்டு, அங்கிருந்து வாடகைக்கமர்த்திய விமானம் ஒன்றிலே தலைநகருக்குத் திரும்பினர்கள்.

4. பாப்பரசர் ஞானஸ்நானம் பெற்ற ஞானஸ்நானத்தொட்டி எங்கே இருக்கிறது?

ரோமாபுரியிலே சான்பங்கிராஸியோ ஆலயத்தில் இருக்கின்றது. அவர் 1876-ம் ஆண்டு பங்குனிமாதம் 2-ந் திகதியன்று ஞானஸ்நானம் பெற்றபோது இந்தத்தொட்டி உபயோகிக்கப்பட்டது. இதன்மீது "12-ம் பத்திநாத பாப்பாசராய்விளங்கும் ஈயூஜினியோ பச்செல்லிக்கு ஞானஸ்நானம் அருளும்போது உபயோகப்படுத்திய தீர்த்ததொட்டி" என்னும்சொற்கள் பொறிக்கப்பட்ட சலவைக்கல்ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

5. இலங்கையில் முதன்முதலாகத் திவ்வியபூசை எப்போது நிறைவேறியது?

1505-ம் ஆண்டு மார்கழிமாதம் 8-ந் திகதி நிறைவேறியிருக்க வேண்டுமெனத் தற்போது கண்டறியப்பட்டிருக்கிறது. அதாவது 1505-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 15-ந் திகதியன்று புயல் காரணமாகக் கப்பற்கூட்டம் ஒன்று முகத்துவாரக்குடாவை அடைந்தது. இந்தக்கப்பல்கள் கடற்கொள்ளைக்காரரைத் துரத்துவந்த சிறியபோர்த்துக்கேய கப்பல்களாகும். இந்தக்கப்பல்களிலே வந்தவர்கள் தங்கள்ஞானவிசாரணைக்குரவராக வண. பிறேவின்சென்ரி எனும் சுவாமியாரையும் கொண்டிருந்தார்கள். இவர்களது கப்பினுக்கும், கோட்டேஅரசருக்குமிடையில் உடன்படிக்கைஒன்று நிறைவேறியதும் தொம் லோறென்கோ டி அல்மீடியா எனும் அந்தக்கப்பினின் நாமத்தை மேற்கொண்டு இவர்கள் அர்ச். லவுறேஞ்சியார்போரால் ஓர்சின்னக்கோவிலைக்கட்டினர்கள். இந்தக் கோவிலில்தான் சரித்திரத்தில் முதன்முறையாக இலங்கைமண்ணில் திவ்வியபூசைநிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## அண்ணு சொல்லுவது:

### மாணவர் மடுயாத்திரை

—⁕—

அருமைச் சகோதரங்களே!

ஞானம் மாஸ்றர் தலைமை ஆசிரியர். அன்று அவரின் மேசையைச் சூழ்ந்து மாணவர் முற்றிகை யிட்டுக் கொண்டிருந்தனர். ஞானம் மாஸ்றரைத் தடவிப் பிடிக்கவும் முடியாதிருந்தது.

சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின் மாணவ கும்பலை நீக்கி, சால்வையை எடுத்துப் பத்துமுறை விசுக்கித் தமது முகத்தால் வடிந்த வியர்வையைத் துடைத்து விட்டு, திரும்பவும் பத்துமுறை விசுக்கி விட்டு, அம்மாணவ கும்பலைப் பார்த்தார்.

பிள்ளைகளிடையே மௌனம் நிலவியது. "பிள்ளைகளே! நாளைக்கு நாம் யாத்திரை செல்கிறோம்; நான் உங்களுக்கு வாசித்துக் காட்டிய ஒழுங்குகளை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்; விசேஷமாக நாம் திருயாத்திரை செய்கிறோம்; ஊர் பார்க்கும் உலாத்துக்குப் போகவில்லை, இது ஓர் பத்திக் கிருத்தியம் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்."

இந்த யாத்திரையை எதற்காகச் செய்கிறோம்? தேவதாயாரின் வரோதயங்களைக் குறித்துச் சருவேசுரனுக்குத் தோத்திரஞ் செலுத்தவும், அத்தாயார்மேல் பத்தியை வளர்க்கவும், உலக சமாதானத்துக்காக மன்றாடவும், நமது நாட்டின் சுபீட்சத்துக்காகவும், திருச்சபையின் அபிவிர்த்திக்காகவும், இலங்கை மனந்திரும்பவும், அதற்கு வேண்டிய உத்தம தொண்டரை—குருமார், சந்நியாசிகளை இரந்து கேட்கவுமே என்பதை மனதிற் பதித்துக் கொள்ளுங்கள்.

எல்லோரும் ஒரேவாக்காய் "ஆம், சார்! நல்லாய் மன்றாடுவோம்" என்றார்கள்.

உங்கள் அன்புள்ள அண்ணு

## வாலிபனே! எழுந்திரு

என்ன கண்ணுருவியான காட்சி! மாது ஒருத்தி கண்ணீரும், கம்பலையுமாய்ச் செல்லுகிறாள். ஊர் முழுவதும் அவளுடன் சேர்ந்து கண்ணீர் விட்டு அழுகிறது.

அவள் ஒரு விதவை. ஆதாரவற்றவள். கணவனை இழந்தாலும தனது கண்மணி உண்டு என்று கவலை தீர்ந்திருந்தாள். தனது உடைமை, ஆஸ்தி பாஸ்தி எல்லாம் அவன்தான் என்று இருந்தாள். தன் வயோதிபத்துக்கு ஊன்றுகோல் உண்டு என்றெல்லாம் கனவுக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தாள். அது அடிபாறி வீழ்ந்தது. வீட்டின் விளக்கு அணைந்தது. மணியை இழந்த நாகம்போலானாள். அவனுடைய உடலைப் புதைக்கும் இடத்தைப்பார்த்து ஆறுதல்அடையப் பிரேதத்திற்குப் பின்னால் சென்றாள்.

பிரேதஊர்வலம் பட்டணத்து வாசற் பக்கம் வந்தது. யேசு அப்பட்டணத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார். விதவை படுந் துயரத்தைக் கண்டார். துக்கங் கொண்டார். அவர் இருதயம் துடித்தது.

சைக்கினை காட்டிப் பாடையைச் சுமந்து செல்பவரை நிற்பாட்டினார். அருகேசென்று: "வாலிபனே! எழுந்திரு" என்று கட்டளை செய்தார். செத்த பிணம் சீவன் இட்ட கட்டளைக் கமைந்தது. உயிர் பெற்றான் வாலிபன். "இதோ உன்மகன் பிழைத் திருக்கிறான்; சந்தோஷமாய் வாழ்ந்திரு" என்றார் யேசு.

கண் இழந்தவள் ஒளிபெற்று வீடு சென்றாள்.

(ஞாயிறுசுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## கணிதப்பகுதி

### சரியான விடைகள்

(1) 36 சிட்டுக் குருவிகள்.
(2) ஒன்றுமில்லை.
(3) 1073741823 சதம்.
(4) 2 பழங்கள்.
(5) 4 சகோதர சகோதரிகள்.

கணக்குகள் முழுவதிற்கும் சரியான விடைகொடுத்தவர் ஒருவர்மாத்திரமே.

எஸ். டி. சகாயம்,
மிரிஸ்வத்த தோட்டம், வெலிப்பன்ன.

நான்கு கணக்குகளுக்குச் சரியான விடை கொடுத்தவர்:

ரோசலின் ஞசைப்பிள்ளை,
அகஸ்ரீன் மேலன், இளவாலை.

## செபமே ஜெயம்

—: 'ஜெயம்' :—

1. காலை, மாலை செபஞ் செய்வோம்
   சணமும் நிதமுஞ் செபஞ்செய்வோம்
   வேலைவேளை செபஞ் செய்வோம்
   விசனந் தீர்க்கும் செபஞ்செய்வோம்.

2. மோசேஸ் என்பார் போலேநாம்
   முறையே நம்பிச் செபஞ்செய்வோம்
   ஈசன் நம்மைக் கைநெகிழார்
   என்றும் நன்றே காத்தருள்வார்.

3. யாக்கோப் என்பார் போலேநாம்
   நாளும் முயன்று செபஞ்செய்வோம்
   ஊக்கந் தீரா வேகமுடன்
   உள்ளம் மலரச் செபஞ்செய்வோம்.

4. ஆயக்காரன் போலே நாம்
   அகந்தை யின்றிச் செபஞ்செய்வோம்
   மாயப் பாவச் சோதனைகள்
   மாயத் தூய செபஞ்செய்வோம்.

5. தனியே இனிய செபஞ்செய்வோம்
   தாழ்ச்சி யோடே செபஞ்செய்வோம்
   விழிப்பா யிருந்தே செபஞ்செய்வோம்
   வெற்றி காண்போம் நிச்சயமே.

## வசனங்களில் மறைந்த ஊர்கள்

1. சர்ப்பந் தீண்டிச் சரவணை இறந்தான்.
2. மரியம்மா தோட்டம் சென்று மலர்பறித்தாள்.
3. யூதகுலம் யேசுவின் பேரில் பொய்க் குற்றம் சாட்டியது.
4. தமக்கை தடியால் தங்கையைத் தண்டித்தாள்.
5. மரியாயின் வருடத்திற்கு மரியதாஸ் தான் கண்டிப்பாய் வருவதாகக் கடிதம் வரைந்திருந்தான்.
6. "பட்டகாலிலே படும்; கெட்ட குடியே கெடும்."
7. வரப்பிரசாத ஊறணியே வாழ்க.
8. கொக்கு வில்அம்புபட்டு வீழ்ந்தது.
9. சிந்தனைக்கு அப்பாற் பட்டது தேவ திரித்துவத்தின் பரம இரகசியம்.
10. பிறதேசஞ் சென்ற சுசீலாவின் பத்தா வத்தையால் கடந்தவாரம் வந்திறங்கினார்.

"போன்"

## கணிதப்பகுதி

1. பின்வரும் சதுரங்களிற் காலியாக விடப்பட்டிருக்கும் இடங்களை நிரப்புக. இடமிருந்து வலமாகக் கூட்டினலும், மேலிருந்து கீழே கூட்டினலும், மூலையிலிருந்து மூலைக்குக் குறுக்காகக் கூட்டினலும் 21 வரவேண்டும்.

| | | |
|---|---|---|
| 10 | | |
| | | 9 |
| | 11 | |

2. ஓர்எண்ணை 9ஆற்பிரிக்க 8 மிச்சமும், 8ஆற்பிரிக்க 7மிச்சமும் வருகின்றது. அப்படியான அதிகுஞ் சிறிய எண் யாது?

யோ. மேரி றீசா,
நல்லாயன் பெண்பாடசாலை,
மன்னார்.

### விடை:

சரவணை, மாதோட்டம், சாட்டி, கைதடி, கண்டி, காலி, ஊறணி, கொக்குவில், வதிரி, பத்தாவத்தை.

## குறும்பு மூளை

தான் ஓர்குதிரையை விழுங்கிவிட்டதாக மூளைக்கோளாறு கண்டுவருந்திய நோயாளிஒருவன் டக்றரிடம் பிடிவாதமாகச் சொல்லிக்கொண்டு வந்தான்.

டக்றரும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவன் கேட்கவில்லை; அவரும் கடைசியாக ஆற்றுது, நீ குதிரையை விழுங்கித்தான் இருக்கிறாய்; சரி, வயிற்றைக்கீறிச் சத்திர வைத்தியஞ் செய்து அதனை வெளியில்எடுக்க வேண்டியதுதான் என்றார்.

நோயாளிக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டது. அவன் அறிவு நினைவற்றுக் கிடக்கும்போது, டக்றருடைய கட்டளையின்பேரிலே ஒரு பெரிய கறுத்தக் குதிரை சத்திர வைத்திய அறைக்குள் கொண்டுவரப் பட்டது.

நோயாளிக்கு மயக்கந்தெளிந்ததும் டக்றர் அவனைநோக்கி: நீ விழுங்கிய குதிரையைப் பார்த்தாயா? என்று சொல்லி அதனைச் சுட்டிக் காட்டினார்.

நோயாளி தலையை அசைத்துவிட்டு "நான் விழுங்கிய குதிரை இதுஅல்ல; அது ஒரு வெள்ளைக் குதிரை ஐயா!" என்றான்.

## கண்டு பிடியுங்கள்

1. உடுப்பைக் களைந்தது, கிணற்றுள் பாய்ந்தது. அது என்ன?
2. வயதில் இளையது, கலியாணத்தில் மூத்தது. அதுஎன்ன?
3. போகும் போது நான் கொன்றதைத் திரும்பி வரும்போது கண்டேன். அது என்ன?
4. ஒருவனை இருவனுக்கும், ஒன்றை இரண்டாக்கும். அது என்ன?

ஜே. ஸ்ரனிஸ்லாஸ் குரூஸ்,
த. க. பாடசாலை,
குடாப்பாடு, நீர்கொழும்பு.

* * *

1. சொல்லிப் பூரித்த மங்கை. இந்தச் சொற் தொடரில் ஓர் பூவின் பெயர் உண்டு. அது என்ன?
2. வேளா, வாளா—வேங்கா, பாங்கா—கண்ணு, கண்ணணு—அணியா, மணியா—தாதா, மாமா—இந்தச் சொற்களிலே போன யாத்திரைப் பதிஒன்றில் எழுந்தருளி உள்ள தேவ அன்னையின் பெயர் இரட்டிப்பாய் இருக்கிறது. அதுஎன்ன?
3. கையி லேந்திய கப்பமும், மார்பில் தாங்கிய மாலையும்—இந்தச் சொற்

(அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரிலே மரியன்னையின் பெயர் ஒன்று அடங்கியிருக்கிறது. அது என்ன ?

மேரி நீற்று வோவ்
க. த. பெண்பாடசாலை,
கடற்கரைத்தெரு,
நீர்கொழும்பு

* * *

விளக்கில் உண்டு ; கிழக்கில் இல்லை.
பருப்பில் உண்டு ; கருப்பில் இல்லை.
பத்தில் உண்டு ; ஐந்தில் இல்லை.
சதத்தில் உண்டு ; ரூபாவில் இல்லை.
சேவலில் உண்டு ; சாவலில் இல்லை.
தபத்தில் உண்டு ; செபத்தில் இல்லை.
பனங்காயில் உண்டு; பனுட்டில் இல்லை.
செம்பில் உண்டு ; பித்தளையில் இல்லை.

இதில் மறைந்து கிடக்கும் சொல்லைக் கண்டறிக !

யோ. பஸ்ரியன் றெஜீஸ்,
சவேரியார் கல்லூரி,
மன்னார்

* * *

(1) ஒரு பெரியவர், தெருவிலே சென்றுகொண்டிருக்கும் ஒரு பெண்ணிடம் பின்னால் வரும் ஒரு பையனைச் சுட்டிக்காட்டி, "அந்தப் பையன் யாரம்மா?" என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண்: "எங்கட மாமாவை அவங்கடமாமா மாமா என்று கூப்பிடுவாங்க. இதிலிருந்து தெரிந்துகொள்ளும்" என்றாள். பெரியவர் விழித்தார், தெரிந்துகொள்ளமாட்டாமல். ஆகையினாலே அந்தப் பையன் யார்என்பதை நீங்களே சொல்லுங்கள்.

(2) எழுத்துகள் மாறுபட்டுநிற்கும் சொற்கள்.

a. 'கமரி யாழ் வாயே'
b. 'எம் காட்டைக் கடப்பது நான்'

ய. தாவீது,
சிறுத்தோப்பு, பேசாலை

## நாவற்குளம்

மாதோட்டப் பகுதியின் மிகப்பெரிய கிராமங்களில் ஒன்று இப்பரந்த கிராமம். இது மன்னாரிலிருந்து மாந்தை வழியாக அடம்பனுக்குச் செல்லும் தெருவுக்கும், மன்னார் - மதவாச்சி வீதிக்கும் இடையிலே மன்னார்ப்பட்டினத்தில் இருந்து ஐந்து மைல் தூரத்தில் இருக்கிறது. பண்டைக்காலத்திலே இலங்கையின் தென் பகுதியில் இயக்கரும், வடபகுதியில் நாகரும் வசித்துவந்தனர் என்பது இதிகாசங்கள் மூலம் அறியப்படுவதாகும். அதன்படி முதன்முதல் இங்கு நாகர்குடியேறியதால் நாகர்குளம்என்றும், பின்னர் அஃது திரிந்து நாவற்குளம் என்றும் காரணப்பெயராக வழங்கிவரலாயிற்று. இதில் பெரிய நாவற்குளம், நாகத்தாழ்வு, சிறு நாவற்குளம் என்பன அடங்கும். இவைகள் ஒன்றுக்கொன்று ஒரு தொடர்புடையனவாகக் காணப்படினும் தனித்தனி குளங்களைக் கொண்டிருக்கின்றன. பெரிய குளத்தை அடுத்த பகுதி பெரியநாவற் குளம்என்றும், தாழ்வான குளத்தைக் கொண்ட பகுதி நாகத்தாழ்வு என்றும், சிறிய குளத்தைக் கொண்டபாகம் சிறுநாவற் குளம்என்றும் அழைக்கப்படலாயின. இவைகள் எல்லாவற்றிலும் பனந்தோப்புகள் ஏராளமாக இருக்கின்றன.

இவற்றுள் பெரிய நாவற்குளம் மிக முக்கியம்பெற்றது. மாதோட்டத்தில் நாகரீகம் இங்கேயே முதல்தோன்றியது என்றும் கூறலாம். ஏனெனில், இங்குவாழும்மக்கள் உடைநடை பாவனைகளில் பெரும்பாலும் பட்டினவாசிகளை ஒத்திருக்கிறார்கள். அன்றியும்இது முன்னாளிலே பலபெரியார்கள் தோன்றிய தலமாகவும் இருந்துவரலாயிற்று. இதன்மத்தியில் பரிசுத்த மரியமாதா போல் அமைந்துள்ள பெரிய ஆலயமும், அண்மையில் மடுமாதாவின் பழைய தலமாகிய மாந்தைப்பதியும் விளிர்கின்றன. இப்பகுதியில் ஆக முதல் தோன்றிய சிறந்த ஒர்கத்தோலிக்க கலாசாலையும் இங்கு நடுநாயகம் போல் விளங்குகிறது. நாகத்தாழ்வில் அர்ச். தொம்மை அப்போஸ்தலரின் பேர்கொண்ட ஓர்சிற்றாலயம் இருக்கின்றது. இவ்விரு இடங்களிலும் பண்டைய குடிபதிகளாக வசிப்போர் கத்தோலிக்கரே. இடையில்வந்து குடியேறிய சிறுதொகை இந்துக்களும் வசிக்கின்றனர். இவற்றைத்தொடர்ந்து பெரியதெருப்பக்கத்தில் இருப்பது சிறியநாவற்குளமாகும். இங்கு குடிசனம் குறைவு. எனினும் தற்போது வாவரத் தெருவைஅடுத்துச் சிற்சில குடிகள் தோன்றுகின்றன. இங்கே ஓர்புகையிரத ஸ்தானமும் இருக்கிறது. மேற்சொல்லிய இருபகுதிகளிலும்பார்க்க இதுவே பிரயாணவசதி கூடியதாகும். மூன்று பகுதிகளிலும் வசிக்கின்ற மக்களின் முக்கிய தொழில் விவசாயமே. கட்டுக்கரைக் குளத்திலிருந்து தூரத்தில் இருப்பதால் வருடத்தில் இருமுறை மாத்திரமே இங்கு நெற்செய்கை நடைபெறுகிறது. இங்கே விதைப்பு, அறப்புக் காலங்களில் மக்கள் கூட்டங்கூட்டமாக வேலைசெய்யும் காட்சி மிகமாட்சியாக இருக்கும்.

எஸ். ஏ.

### சூதும் வாதும்

## வேதனை செய்யும்

முன்னோர் காலத்தில் ஒரு தாய் ஆட்டுக்கு எழு குட்டிகள் இருந்தன. அவைகளை அது மிகவும் அன்போடு பராமரித்து வந்தது. ஒருநாள் அது தன் குட்டிகளுக்கு நல்ல இரை தேடிவர உத்தேசித்து, அவைகளைத் தன் அருகில் அழைத்து: நான் காடு சென்று திரும்பி வருமட்டும் ஓநாய் முன் தென்படாது, குடிசைக்குள் எவரையும் நுழைய விடாது கவனமாய் இருக்க வேண்டுமென்று கட்டளை கொடுத்தது. இன்னும் ஓநாயை அதன் கனத்த குரலோசைகொண்டும், கறுத்த நகத்தைக் கொண்டும் அறியலாம் என்றும் அடையாளம் சொல்லிவிட்டுக் காடு சென்றது.

சிலமணி நேரம் கழிந்தபின் கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து: "மக்களே! உங்கள் தாய், இதோ! வந்து விட்டேன்; கதவைத் திறவுங்கள்" என்ற ஓசை கேட்டது. அந்தக் கனத்த ஓசையைக் கேட்டதே குட்டிகள்: "நீ எங்கள் தாய் அல்ல; எங்கள் தாயின் குரல் மிகவும் மெதுமையானது; ஆதலால் கதவைத் திறக்க மாட்டோம்" என்று திடமாகப் பதில் அளித்தன.

தனது சூழ்ச்சி பலியாதது கண்ட ஓநாய் ஒரு கடைக்குச் சென்று தன் குரலை மெதுமையாக்க வேண்டித் தேன் வாங்கிக் குடித்தபின் மீளவும் குட்டிகளின் குடிசைக்குச் சென்று முன்போலத் திரும்பவும் உரைத்தது.

அப்பொழுது குட்டிகள் ஓநாயின் பாதத்தில் கறுத்த நகங்கள் இருப்பதைத் துவாரத்தின் வழியாய்க் கண்டுகொண்டபடியால், அதை நோக்கி: நீ எங்கள் அம்மா அல்ல; ஏனெனில், அம்மாவின் நகங்கள் கறுப்பல்ல என்றன.

இதைக் கேட்ட ஓநாய் தனது சூழ்ச்சி பலிக்காதது கண்டு ஒரு அப்பக்காரனிடம் போய்: எனது நகம் காயம் அடைந்து விட்டதால் அதிலே கொஞ்சம் பிசைந்தமா பூசச் சொல்லிக் கேட்டது. அவனும் அவ்வாறு செய்யவே, அது மிகுந்த சந்தோஷத்துடன் குட்டிகளிடம் சென்று முன் சொன்னவாறே திரும்பவும் சொல்லிக் கதவில் தட்டிற்று.

அப்போது ஆட்டுக் குட்டிகள் நகங்களைக் காட்டும்படி கேட்டதால், ஓநாயும் தாமதமின்றித் தன் நகங்களைத் துவார வழியாய்க் காட்டிற்று. நகங்கள் வெள்ளை நிறமாய் இருந்ததினால் அவைகள் கதவை அச்சமின்றித் திறந்தன. திறந்ததும் யாரைக் கண்டன? தங்கள் அம்மாவையா? இல்லை, இல்லை. தங்கள் சத்துராதியான ஓநாயை. கண்டதே என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தன. ஐயோ பாவம்! ஒரு குட்டி மேசைக்குக் கீழும், மற்றவைகள் கட்டில், கூடை, அடுப்பு, போசனசாலை ஆகியவற்றின் கீழுமாக ஓடிப்போய் ஒளித்துக் கொண்டன. ஆனால், கடைக் குட்டி மாத்திரம் ஒரு மூலையில் இருந்த பெரிய மணிக் கூட்டுள் போய் மறைந்து இருந்தது.

ஓநாயோ ஒவ்வொன்றும் ஒளித்திருந்த இடங்களை ஒரு சணப்பொழுதில் கண்டறிந்து ஆறு குட்டிகளையும் ஒன்றொன்றாய் விழுங்கியது. ஆனால், கடைக் குட்டி மணிக்கூட்டுள் ஒளித்தபடியால் ஓநாயின் வாயிலிருந்து தப்பிக் கொண்டது.

அத்தனை குட்டிகளையும் விழுங்கியதால் ஓநாய் நடக்க முடியாமல் தள்ளாடித் தள்ளாடி ஒரு குளக்கரையருகே சென்று ஆழ்ந்த நித்திரையாய்க் கிடந்தது.

சிறிது வேளையின் பின் தாய் ஆடு காட்டிலிருந்து திரும்பி வந்து குடிசையைப் பார்த்த பொழுது குட்டிகளைக் காணாமல் தவித்தது. சலித்தது. ஒவ்வொரு குட்டியாகப் பெயர் சொல்லி அழைத்தது. ஒரு பதிலும் இல்லை. கடைசியாகக் கடைக் குட்டியின் பெயரைக் கூப்பிடவே மணிக்கூட்டுள் இருந்து ஒரு சத்தம் வெளி வந்தது. தாய்ஆட்டின் சத்தத்தை அறிந்த குட்டி உடனே தான் மறைந்திருந்த இடத்தை விட்டு வெளிவந்து, நடந்ததைக் கண்ணீர் பெருக அழுது கொண்டு சொல்லியது. அதைக் கேட்ட தாய் ஆறாத் துயரில் ஆழ்ந்தது.

பின்னர் சிறிது வேளையின் பின் அது கடைக் குட்டியுடன் குளக்கரைக்குச் சென்றது. அங்கே ஆழ்ந்த நித்திரையில் கிடந்த ஓநாயைக் கவனித்த போது, அதன் உடம்பு புரளுவதைக் கண்டு தன் குட்டிகள் சிலசமயம் உயிருடன் இருக்கக் கூடுமென்று எண்ணிக் குடிசைக்கு ஓடிச் சென்று ஒரு கத்தியும், ஊசியும், நூலும் கொண்டு வந்தது.

வந்ததும் மிகுந்த கவனத்துடன் ஓநாயின் வயிற்றைப் பிளக்கவே, குட்டிகள் யாவும் ஒன்றொன்றாய் யாது தீங்கும் இன்றி வெளிவந்து, ஆனந்த பரவசத்துடன் தாயைக் கட்டி அணைத்து விளையாடின. பின்னர் அவைகள் ஒவ்வொன்றும் தாயின் கட்டளைப்படி பெரிய கற்கள் கொண்டு வரவே, அது அவைகளை ஓநாயின் வயிற்றுள் போட்டுத் தைத்து விட்டது.

ஓநாய் நித்திரை விட்டு எழுந்தபோது அசைய முடியாதது கண்டு, தனது தாகத்தைத் தீர்ப்பதற்காக ஒரு விதமாய் நிலத்துடன் இழுபட்டுக் கொண்டு குளக் கட்டில் ஏறித் தண்ணீர் குடிக்கும்படி குனிந்ததும் வயிற்றுள் இருந்த கற்கள் புரளவே, அது சரிந்து குளத்துள் விழுந்து இறந்தது.

"தீயது செய்யின் தீமையே விளையும்." ஆதலால் நாம் உலகில் இருக்குமட்டும் பிறருக்குத் தீங்கு விளையாது நன்மையே புரிந்து வருவோமாக!

— எம். எஸ். தேவதாசன்

## ஞானம் வளர்க்கும் திருக்காட்சி

'செல்வம்'

1\. ஞானோப தேசப் பொருட்காட்சி அஃது
ஞானம் வளர்க்கும் திருக்காட்சி
ஆனந்த மான கலைக்காட்சி மிக்க
அன்பு பெருக்கும் அருட்காட்சி.

2\. விவ்வித சித்திரக் காட்சிக ளாற்திரு
வேதத்தின் போதகம் காட்டுவதால்
திவ்விய வேதத்தைக் கற்றிட லாம்அதனால்
தேவனின் நேசமும் பெற்றிடலாம்.

3\. சத்திய வேதத்தின் போதகத் தைப்பிறர்
சந்தேக மின்றித் தெரிந்துகொள்வார்
உத்தம மானஇக் காட்சியின் மாட்சியால்
உச்சித பத்தி பரம்பிடலாம்.

4\. சத்திய வாழ்வினைக் கண்டறிந்து நித்தம்
சற்சமய வழி பாடுகொள்ள
உத்தம பாதைதான் காட்டிடு மேஇந்த
உக்நத மான பொருட்காட்சி.

5\. ஈனச் செயல்களை விட்டுவிட்டு என்றும்
ஈசன் திருப்பதம் நாடுதற்கு
மோன முறையாக ஞானநெறி சொல்ல
முற்றுஞ் சிறந்த பெருங்காட்சி.

6\. ஒப்பில் செபமாலைத் தாயாருக் கென்றேநாம்
ஒப்புக் கொடுத்தநல் மாதமதாம்
ஐப்பசித் திங்களின் எட்டாம் நாளேஇந்த
அற்புதக் காட்சியின் ஆரம்பநாள்.

7\. மரியாய் சமாகம நாட்களி லேஇந்த
மாண்புறு காட்சி நிகழ்வதினால்
பிரியாஅன் போடு பெருந்திர ளாய்க்கூடிப்
பெருமைப் படுத்துவோம் வாரீரே.

8\. பாலரும் வாலரும் பார்த்திடு வோம்நாடிப்
பத்திரி சியாரின் கல்லூரியில்
கோல விழாவதின் ஆரம்ப பொன்னாளைக்
குன்றா மகிழ்வுடன் காத்திருப்போம்.

9\. சிந்தித்துச் சித்திரம் தீட்டிவைப் போம்பல
சிற்ப உருவங்கள் ஆக்கிவைப்போம்
பந்தயப் போட்டியில் பங்கெடுத் துநின்று
பாங்காய்ப் பரிசில்கள் பெற்றிடுவோம்.

10\. மாதா சமாகமம் வந்ததே மக்கள்நாம்
மங்காப் பெருமையாய் எங்கள்திரு
வேதஞ் சிறந்திட வேதம் பரந்திட
வெற்றி விழாவாய்க்கொண டாடுவமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் மடு யாத்திரை

ஆவணிமாதம் 27-ம் திகதியன்று மாலே யாழ்ப்பாணப் புகையிரத ஸ்தானத்தில் ஒரேகூட்டம். வழமைக்கு மாறுயிருந்தது. அங்கே நின்றவர்களில் ஒருகுழுவினர் ஒரேசுறுசுறுப்பாய்க் காணப்பட்டனர். சிலவாலிபர்கள் அங்குமிங்குமாக ஓடிச்சென்று அங்கு நின்ற குழுவினரின் சாமான்களைத் தூக்கிச்சென்று உதவி புரிந்தனர். இதைக்கண்டநான் இவர்கள் எங்கு போகிருர்கள் என்றுஅறிய ஆவலுற்றேன். அங்குநின்ற ஒருவரைநோக்கி: இவர்கள் எங்குபோகிருர்கள் என்று வினவினேன். அதற்குஅவர் அளித்த பதிலைக்கேட்டதும் ஆச்சரியம் தாளவில்லை. ஏன்? நானுமே மடுவுக்குப் போக அங்கு வந்துநின்றேன். நல்ல துணை கிடைத்ததேஎன்று மறுகணம் ஆனந்தம்அடைந்தேன்

குறித்தநேரத்திற்குப் புகையிரதம் வந்துசேர்ந்தது. எல்லோரும் ஏறிக்கொண்டனர். இரதமும் நகரத்தொடங்கியது. சிலநிமிஷங்கள் சென்றன. ஒவ்வோர்பகுதியிலுமிருந்து செபஒலை மேலெழுந்தது. அங்கிருந்தவாலிபர்களும், பெண்களும் மரியாயின்கீதங்களை அழகாகப் பாடினர். இவ்வித செபவோசை, சங்கீதஒசை மத்தியில் எல்லோரும் மருதமடுப்பதியை மறுநாட் காலே 4-30மணிக்கு அடைந்தனர்.

மழை இலேசாகத் தூறிக்கொண்டிருந்தது. அதை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. மடுப்பதியையடைந்து பஸ்வண்டியிலிருந்து இறங்கியதும் கோவிலுக்குள் நுழைந்தனர். பலநாட்களாகத் தாயைப்பிரிந்திருந்த பிள்ளைகள் அவளைக்கண்டதும் எவ்வளவுஆனந்தம் எய்துவார்களோ அதே போல ஆனந்தமும், அகமகிழ்ச்சியும் ஒவ்வொருவர்முகங்களிலும் பிரதிபலித்தன. திவ்வியபூசை நிறைவேறியது. பயபக்தியுடன் கண்டார்கள்.

எல்லோருக்கும் வீடுகள் அவரவர் வசதிக்குஏற்றபடி கொடுக்கப்பட்டன. பின்னர் 8-30மணிக்குவண. ஏ. மைக்கேல்சாமி சுவாமியவர்கள் திவ்விய பூசை நிறைவேற்றினர். தொடர்ந்தாற்போல் ஆரம்பசெபமும், பிரசங்கமும் நடைபெற்றன.

பின்புசிலர் மத்தியானப்போசனத்திற்கு ஆயத்தம்பண்ணினர். மற்றவர்கள் தங்கள்நேரத்தை வீண்போக்காதிருக்குமாறு சிலவாலிபர்களால் நல்வாசினைப் புஸ்தகங்கள் வீடுவீடாகக் கொண்டுசென்று வழங்கப்பட்டன. 12மணிக்குத் தேவநற்கருணைச் சந்திப்பு நடந்தது. பிற்பகல் மூன்றுமணியளவில் சிலுவைப்பாதை நடைபெற்றது.

4 மணிக்கு இருதய ஆண்டவரின் கோவிலில் அப்போஸ்தலிக்கத்தைப் பற்றிய சம்பாஷணை நடைபெற்றது. வண. ஏ. மைக்கேல்சாமி சுவாமியவர்கள் அப்போஸ்தலிக்கத்தின் மகிமையையும், ஒவ்வொரு கிறீஸ்தவனும் அதில்ஈடுபட எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறுன் என்பதையும் விரிவாகவும், அழகாகவும் வியாக்கியானஞ்செய்தார். சிலர்கேட்ட கேள்விகளுக்குத் தகுந்த விடைகளும்இறுத்தார்.

5-30 மணிக்குச் செபமாலையும், சற்பிரசாதஆராதனையும் நடைபெற்றன. வண. வேந்தர்க்கோன் சுவாமியவர்கள் பெண்மணிகளின் கடமைகளைப்பற்றி ஓர்அழகானபிரசங்கம் செய்தார். 9 மணியளவில் செபமாலை ஓதப்பட்டது. அந்நேரத்தில் காரணிக்கவிளக்கம் திரையிடப்பட்டது.

மறுநாளும் இதே நிகழ்ச்சிநிரல். அத்தோடு எல்லோரும் பின்னேரம் 7 மணியளவில் சுற்றுப்பிரகாரமாய் லூர்து கெபிக்குச் சென்றனர். அவர்கள் கைகளிற் கொழுந்துவிட்டெரிந்த மெழுகுவர்த்திகள் அவர்களின் இதயங்கள் தாய்அன்பினுல் எரிவதை எடுத்துக்காட்டியன. "வாழ்க! வாழ்க!" என்றஒசை அக்கானகத்தின் அமைதியைக் கிழித்துக்கொண்டு மேலெழுந்தது. லூர்துமாதாவின் பாதத்தண்டையில் சாஷ்டாங்கமாய்விழுந்து எல்லோரும் தங்களை அந்தநாயகிக்கு ஒப்புக்கொடுத்தனர்.

திங்கட்கிழமைகாலே 5-30மணிக்குத் திவ்வியபூசை நிறைவேறியதும் தாயைவிட்டுப் பிரியும்நேரம் நெருங்கியது. எல்லோர்மனங்களும் துக்கத்தாற்குழறின. ஆனுல், அவர்களின் முகங்கள் வரும்போது இருந்ததிலும்பார்க்க ஒளிவிட்டுப் பிரகாசித்தன. ஏன்? எல்லோரது உள்ளங்களிலும் திவ்ஷியஇஸ்பிரீத்துசாந்துவானவர் இடம்பெற்றிருந்தார். யாழ்ப்பாணப் புகையிரதஸ்தானம் வரும்வரையும் செபமாலை ஓதப்பட்டது. தேவகீதங்கள் பாடப்பட்டன. இவ்விதம் ஞானமனேகரமாக எங்கள் திருயாத்திரை முடிவுற்றது.

"ஞானம்"

## பன்னிரு சனிக்கிழமைப் பக்தி

மார்கழிமாதம 8-ந் திகதியாகிய மாதாவின் அமலோற்பவதிருநாளுக்கு முன்வரும் பன்னிரு சனிக்கிழமைப் பக்திமுயற்சி நிகழும் புரட்டாசிமாதம் 18-ந் திகதியாகிய வருகிறசனிக்கிழமை ஆரம்பமாகி வருகிறமார்கழிமாதம் 4-ந் திகதி சனிக்கிழமை முடிவாகும். இப்பன்னிருசனிக்கிழமைகளில் ஒவ்வோர் சனிக்கிழமையும் ஒவ்வோர் பரிபூரண பலன் அடையலாம். இந்தப்பலனை அடைதற்கான நிபந்தனைகள் வருமாறு: (1) பாவசங்கீர்த்தனம் (2) திவ்விய நற்கருணைபெறுவது (3) மாதாவின் அமலோற்பவத்திற்குச் செய்யப்படும் நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாகச் சிலசெபங்கள் அல்லது தியானஞ்செய்வது (4) பரிசுத்த பாப்பாண்டவரின் கருத்துகளுக்காக வேண்டிக்கொள்வது.

(அர்ச். 10-ம் பத்திநாதர் 1921-ம் ஆு)

## சிந்தாத்திரை மாதா திருநாள்
### சாட்டி (வேலணை)

சிந்தாத்திரைமாதா ஆலயத்தின் பிரதான திருநாள் இம்மாதம் பன்னிரண்டாந் திகதி (12-9-54) ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி, 23-ம், 24-ந் திகதிகளில் கடைசிவேஸ்பர், பாடற்பூசை, திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்துடன் முடிவடையும். ஞானக்கடமைகளுக்கு உதவியாகப் பலகுருமார் சமுகமாயிருப்பார்கள். 24-ந் திகதி காலே 5 மணிதொடக்கம் திவ்விய பூசைகள் நிறைவேறும்.

கட்டளைக் குரவர்.

## புரட்டாசி மாதம்

**போதுக்கருத்து**:— கத்தோலிக்க சேவையிலே வாலிபர்கள் எண்ணிக்கையிலும், ஞானத்திலும் முன்னேறும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து**:— திருச்சபையின் சமூகதர்மக் கொள்கை வேதபோதகநாடுகளில் அதிகமாகப் பரவி நன்கு மதிக்கப்படுவதற்காக மன்ருடிக்கொள்வது.

## விளம்பர விகிதம்

| | ரூ. ச. |
|---|---|
| நன்றியறிந்தஸ்தோத்திரம் ... | 2 00 |
| மரணஞாபகம் ஒரு அங். ... | 2 00 |
| ஓடர் நிசி (Order Nisi) | |
| இரண்டுமுறைக்கு ... | 10 00 |

மற்றும் விளம்பரங்களுக்குக் கடித மூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்

## எமது கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. ச |
|---|---|
| சின்னக் குறிப்பிடம் ... | 20 |
| பெரிய குறிப்பிடம் ... | 35 |
| மெய்விவாகக் குறிப்பிடம் ... | 05 |
| உறுதிப்பூசுதற் குறிப்பிடம் | அச்சில் |
| சத்தியவேத தர்ப்பணம் போதககாண்டம் (Part I)... | 2-50 |
| எனது பூசைப் புத்தகம் திவ்வியபூசைஆராதனையை முழுதாய் அடக்கியது. | |
| கிளேஸ் பேப்பர் ... | 5-00 |
| பைபிள் ,, ... | 5-75 |
| ,, அடையாளமுள்ளது... | 6-00 |
| மோக்ஷபாதை (கலிக்கோ) ... | 5-00 |
| ,, (தோல்) ... | 7-50 |
| முத்தித்திறவுகோல் (கலிக்கோ)... | 2-50 |
| ,, (தோல்) ... | 3-50 |
| செபச் செண்டு ... | 75 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள் ... | 2-00 |
| திவ்விய பூசையின் சாதாரண செபங்கள் ... | 60 |
| நித்திய ஆராதனை ... | 25 |
| இரா ஆராதனை ... | 25 |
| திருமணித்தியாலம் ... | 40 |
| திவ்வியபூசை மகத்துவம் ... | 2-50 |
| பூசை உதவி மந்திரம் ... | 40 |
| பூசை உதவி மந்திரம் (மட்டை) ... | 15 |
| வேதாகமவாசிப்பு ... | 90 |
| சற்பிரசாத அன்பன் ... | 20 |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை ... | 2-95 |
| பசாம் ... ... | 1-50 |
| சிலுவைப் பாதை ... | 20 |
| மகா மனந்திரும்புதல் இயக்கப் பிரசங்கங்கள் ... | 1-00 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) ... | 6-50 |
| (பசாமில்லாமல்) ... | 5-00 |
| கத்தோலிக்கு கீர்த்தனைமாலை (தமிழ் மாத்திரம்) ... | 75 |
| லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் (2-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் லத்தீன் இரண்டும் (நோட்டுகளுடன்) ... | 4-75 |
| கிறீஸ்துநாதர் சரித்திர ஆராய்ச்சி ... | 75 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) ... | 90 |
| ,, (Part II) ... | 90 |
| ,, (Fart III) | 90 |
| தேவமாதாவின் வணக்கமாதம் ... | 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் ... | 1-50 |
| மருதமடு யாத்திரைக் கைத்துணை ... | 50 |
| அவர்கள் மூன்று சிறுவர்கள் (பாத்திமா) ... | 2-50 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் ... | 1-50 |
| நவதின உற்சவம் ... | 75 |
| தரும அப்பம் ... | 1-00 |
| பத்திச் சபைகள் ... | 20 |
| ஆத்தும தரிசனம் ... | 20 |
| தமிழரின் பூர்வசரித்திரம் ... | 50 |
| ஹெலேனு அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக் கன்னிகை சரித்திரம்... | 35 |
| அர்ச். லூயிமேரி கிறிஞ்ஞோன் சீவிய சரித்திரம் ... | 40 |

● தபாற்செலவு பிரத்தியேகம்.

● புஸ்தகப் பெறுமதியின் அரைவாசிப்பணம்அனுப்பாத வி.பி.பி. கவனிக்கப்படமாட்டாது.

## இந்திய கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. சதம். |
|---|---|
| புதுத்தியானங்கள் (அனுதின தியானக்குறிப்புகள்) ... | 15-00 |
| சத்தியவேத சித்திரவிளக்கம் ... | 5-50 |
| புதியஏற்பாடு (பெரிது) ... | 8-50 |
| ,, (சிறிது) ... | 3-75 |
| ஞானேபதேசக் கோர்வை (மூன்று பாகங்களும்) ... | 9-75 |
| சத்திய வேதாகம சங்க்ஷேபம் பழையஏற்பாடு & புதியஏற்பாடு | 1-00 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் ... | 1-00 |
| திருப்பாடுகளின்மேல் தியானம் ... | 1-55 |
| கிறீஸ்துநாதர் அனுசாரம் ... | 3-50 |
| வாழ்க்கையில் வழிகாட்டி ... | 2-75 |
| யேசுநாதர் | 2-75 / 3-90 |
| அன்பின் அழைப்பு ... | 2-75 |
| அன்பின் அனல் ... | 45 |
| அன்பின் அரசர் ... | 2-00 |
| கத்தோலிக்கு களஞ்சியம் | அச்சில் |
| மன்ரேசா ... | 3-00 |
| அர்ச்சியசிஷ்டவாரம் ... | 1-00 |
| ஞானசீவியம் ... | 3-00 |
| கிறீஸ்துநாதர் எங்கள் கர்த்தா ... | 1-00 |
| பிரதான மந்திரங்களின் வியாக்கியானம் ... | 2-25 |
| என்பலி (சங்கீதத்துடன்) ... | 1-25 |
| மரியாயின் மைந்தர் மபாக்ஷம் | 2-50 / 2-00 / 1-50 |
| மரியாயின் வல்லபம் ... | 3-25 |
| கற்பு என் பொக்ஷம் ... | 50 |
| தேவமாதாவின் அமலோற்பவ மகிமை ... | 50 |
| குருக்களுக்காக ஜெபிப்பதேன் ... | 25 |
| புதுநன்மை பாடத்திட்டம் ... | 90 |
| திருக்குடும்ப பக்திமாலை ... | 3-00 |
| பத்தாம் பத்திநாதர் ... | 2-60 |
| திருஇருதய வணக்கமாதம் ... | 2-00 |
| சூசையப்பர் வணக்கமாதம் ... | 2-00 |
| திருஇருதய நவநாள் ... | 25 |
| உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு உதவி நவநாள் ... | 35 |
| உத்தரிக்கிற ஆத்துமாக்களின் வணக்க மாதம் ... | 1-65 |
| திருஇருதயநண்பர்களுக்குத் திருமணி ... | |
| சனிக்கிழமைப் புதுமை ... | 2-00 |
| தாழ்ச்சிக் கண்ணடி ... | 50 |
| துறவற சல்லாபம் ... | 1-00 |

* * *

**கத்தோலிக்க சரிதைகளும், நாவல்களும்**

| | |
|---|---|
| யேசு திருச்சரிதை ... | 1-00 |
| யேசுவின்சிறிய புஷ்பம் ... | 1-10 |
| அர்ச். சூசையப்பர் ... | 55 |
| அர்ச். அருளானந்தர் ... | 2-00 |
| அர்ச். ஞானப்பிரகாசியார் சரித்திரம் ... | 1-10 |
| அர்ச். வின்சென்ட் தெ பவுல் ... | 1-10 |
| புதுமைவள்ளல் புனித அந்தோனியார் ... | 45 |
| தொன் பொஸ்கோ சரித்திரம் ... | |
| பிரதாப முதலியார் சரித்திரம் ... | 3-90 |
| பிரதாப முதலியார் சரித்திரம் சிறுவர், பதிப்பு ... | 2-00 |
| பங்கிராஸ் ... | 3-50 |
| இரத்தம்வடிந்த லீலி ... | 75 |
| இன்பத்திலும் துன்பத்திலும் ... | 2-00 |
| திக்கற்ற தையல் ... | 2-00 |
| துப்பாக்கி முனையில் ... | 1-00 |
| மலரோ மணமோ ... | 2-60 |
| லீலிமலர் (அல்லது)கற்பெனும் பரிசுத்த புண்ணியம் ... | 1-55 |
| கேளரநாட்டின் கமலம்(சகோதரி அல்போன்சா)... | 3-20 |

கிடைக்குமிடம்:—

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

தம்மை அண்டிவருபவர்களுக்குச் சதா சகாயங்களைப் பொழியும் சதாசகாய மாதாவினது சகாயத்தால் பதின்மூன்று வருடகாலமாகத் தொய்வுஎன்னும்வியாதியால் அதிககஷ்டமுற்ற எனதுமகன் ஆச்சரியகரமான சுகத்தை அடைந்தான். நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன். சதாசகாயமாதாவுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

அந்தோனி கஸ்பாறு.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 16-1954.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org